26 வது ஆண்டில்
கனடாவின் முத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416.282.8059
Email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
(for your Home & Auto)

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 பாலம் 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2016

# கனேடிய - ஐரோப்பியஒன்றிய வர்த்தக ஒப்பந்தம்

கனடாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையேயான CETA எனப்படும் பரந்த பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (Comprehensive Economic and Trade Agreement) கடந்த 2016 ஒக்ரோபர் 27இல் கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ விற்கும் ஐரோப்பியஒன்றியத்தின் தலைவர் Martin Schulz இற்கும் இடையே Brussels இல் கையொப்பம் இடத் திட்டமிடப்பட்டிருந்தது.



இந்த CETA வர்த்தகத்திற்குரிய தற்காலிக மான உடன்படிக்கை கடந்த பழமைவாதக் கட்சி அரசால் 2013 ஒக்ரோபர் 18இல் கையொப்பம் இடப்பட்டது. இதன்பின்னர் இது ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 28 நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டாலே இந்த உடன்படிக்கையின் இறுதி ஒப்பந்தத்தில் மேலே குறிப்பிட்ட இரண்டு தலைவர்களும் கையொப்பம் இடலாம்.

கனேடிய சர்வதேச வர்த்தக அமைச்சர் Chrystia Freeland 2016 ஒக்ரோபர் 24இல் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்த தகவலின் படி ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு நாடான பெல்ஜியம் இன்னமும் இந்த CETA உடன்படிக்கையை அங்கீகரிக்கவில்லை. ஏனைய 27 நாடுகளும் அங்கீகரித்துவிட்டன. இதனாலேயே இறுதி ஒப்பந்தத்தில் இரண்டு தலைவர்களும் கையொப்பமிடுதல் பிற்போடப் பட்டுள்ளது என்றார்.

பெல்ஜியம் அரசு இந்த CETA உடன்படிக்கைக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்றால் அந்நாட்டில் உள்ள இரண்டு பிராந்திய அரசுகளும் ஆதரவு தெரிவிக்க வேண்டும். பெல்ஜியத்தின் வடபகுதி Flemish வடக்கு என அழைக் கப்படும் Dutch மொழி பேசும் மக்களைக் கொண்ட பிராந்தியம். பெல்ஜியத்தின் தென்பகுதி Wallonia என அழைக்கப்படும் French மொழி பேசும் மக்களைக் கொண்ட பகுதி. இவ்விரண்டு பிராந்திய அரசுகளுக்கு பெல்ஜியம் அரசு எடுக்கும் முடிவை எதிர்க்கும் Veto உரிமை உள்ளது. CETA உடன்படிக்கைக்கு Flemish பிராந்திய அரசு ஆதரவு தெரிவித்தாலும் Wallonia பிராந்திய அரசு எதிர்ப்புத் தெரிவிக்கிறது. இதனாலேயே பெல்ஜியம் அரசால் CETA உடன்படிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் ஆதரவு தெரிவிக்க முடியவில்லை. கனேடிய அரசிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் (தொடர்ச்சி 03ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT
குமார் ஜெகசோதி
11552 Yonge Street
Richmond Hill, Ontario, L4E 3N7
www.lexusrh.com
Tel: 905 883 8812 x2378
Tel: 416 789 7871 x2378
Toll Free: 1 866 891 8812
Fax: 905 883 4519
Cell: 416 451 0565
kjegasothy@lexusrh.com
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

IP GOLDHOUSE 905-554-5890

வீடு, வியாபார நிலையம் வாங்க விற்க...
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC.

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%
Lock your mortgage while interest rates are low!

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel: 416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

# HOUSE FOR SALE

## 32 Nahanni Terrace




**Scarborough**
3+1 Bedrooms
2 Washrooms
Seperate Entrance

## 22 Havery Jones




**Bowmanville**
5 Bedrooms
4 Washrooms
3300 Sq.ft.

## 21 Berger Ave.




**Markham**
4 Bedrooms
4 Washrooms

1st , 2nd Mortgage for Home/ Business
We buy old houses for highest price
Home Renovation
Home renovation Loan

CANADA WEALTH MANAGEMENT INC
## CANADA WEALTH MANAGEMENT INC.
6055 Steels Ave E. Unit C102, Scarborough, ON. M1X 0A7
RANGAN Tel: 647.702.2159

வீடு வாங்க விற்க,
வீடுகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் 1st,2nd மோட்கேஜ்,
பழைய வீடுகள் பெறுமதி மிக்க விலையில் வாங்கப்படும்.
Home Renovation செய்து கொடுக்கப்படும்.

# Selling or Buying




Luxury Condo in Richmondhill
1BR, 1Bath room, parking & Locker
Assignment sale $309,000



Custom Built Home
BR: 4 + 1, Bath Room:4, Finished w/o Basement
$1,459,000




Popular Pizza Franchise
Sale: Almost $1M/Year, Rent:3K/Month
$499,000, Finaning available; up to 65%



Vacant Land
Almost 3 Acres situated in a high traffic location. Current zoning: Multi residential building up to 117 units. $ 1.25M

**Thas ThiruNavukkarasu**
Sales Representative Dip-in-Eng.(Hons)
416-388-4333
thasremax@gmail.com



RE/MAX ACE
REALTY INC. BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED
www.remaxace.com
Not intended to solicit buyers/sellers under contract

# Friends MATRIMONY



திருமணத் தேடலுக்கோர் உங்கள் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண பொருத்தம் பார்க்கப்படும்

- ✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✓ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✓ அல்லது தொலைபேசி, தபால், email லூடாக பதிவு செய்யலாம்

info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
|---|---|
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# கனேடிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இடையேயான CETA வர்த்தக ஒப்பந்தம் தற்போது பெல்ஜியத்தின் பிராந்திய அரசான Wallonia இன் முடிவி-லேயே தங்கியுள்ளது.

கனேடிய அரசின் சார்பில் இந்த வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்துடன் அதிலும் குறிப்பாக Wallonia பிராந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் கனேடிய சர்வதேச வர்த்தக அமைச்சர் Chrystia Freeland உம் அரச உயர் அதிகாரி சிதாவா Verheul ஆவர். சிதாவா கடந்த பழமைவாதக்கட்சி அரசு இருந்த காலத்தில் இருந்து இந்த CETA தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறார்.

பெல்ஜியத்தின் Wallonia பிரதேசத்தின் Walloons எனப்படும் பிரெஞ்சு மொழி பேசும் மக்கள் கனடாவுடனான வர்த்தக உடன்படிக்கையான CETA இற்கு எதிர்ப்புத் தெரிவிக்கக் கூறும் காரணங்களைப் பார்ப்போம்.

இப்பிரதேசம் வலுவான தொழிற்சங்கங்களின் ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசம். இங்கு வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையும் அதிகம் ஆகும். 3.5 மில்லியன் பிரஞ்சுமொழி பேசும் மக்களைக் கொண்ட இந்தப் பிரதேசம் பொதுவாக எந்த வர்த்தக உடன்படிக்கையை யும் (NAFTA, TTIP) எதிர்க்கிறார்கள். விவசாயப்பிரதேசமான இந்தப் பிரதேச மக்கள் CETA ஆல் தங்களது உற்பத்திப் பொருட்களின் விற்பனை பாதிக்கப்படும் என நினைக்கிறார்கள். இவ்வாறான ஓர் உடன் படிக்கையில் கையொப்பம் இட்டால் பல பன்னாட்டு நிறுவனங்கள் (Multinational Corporations) தங்களது வியாபார நலனுக்காக தமது விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைத்து விடுவார்கள்.



கனடாவில் அலுவலகங்களைக் கொண்டுள்ள மிகப்பெரிய அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் CETA இனைப் பாவித்து தமது பொருளாதாரத்தினை அவர்களின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார்கள். Walloons மக்கள் இந்த CETA உடன் படிக்கையில் உள்நாட்டு நீதி மன்றங்களுக்கு இவ்வியாபாரத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அவ்வழக்கை விசாரித்து நியாயம் வழங்கும் உரிமை இருக்க வேண்டும் எனவும் வலியுறுத்து கிறார்கள். Wallonia பிரதேசத்தின் தலைவர் Paul Magnette நாடாளுமன்றத்தில் CETA மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இந்த உடன்படிக்கையை ஆதரிப்பது விபரமறியாது ஒரு பொருளை வாங்குவது போல் இருக்கிறது என்றார்.




கனடாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையேயான இந்தப் பரந்த பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (CETA) பற்றிப் பார்ப்போம். இவ் உடன்படிக்கை கனடா கையொப்பம் இட்டுள்ள NAFTA இற்கு அடுத்தபடியான மிகப்பெரிய வர்த்தக உடன் படிக்கையாகும்.

இவ் உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் கனடாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையே 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் Prague இல் நடைபெற்ற மாநாட்டில் ஆரம்பித்தது. கடந்த ஏழு வருடங்களாகப் பேரம் பேசப்பட்டு வந்த இந்த உடன்படிக்கை தற்போது Wallonia பிராந்திய அரசின் முடிவில் தங்கியுள்ளது. இவ்வுடன்படிக்கை 35 மில்லியன் மக்களைக் கொண்ட கனடாவிற்கும் 500 மில்லியன் மக்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையேயான வியாபார ஒப்பந்தமாகும். இவ்வுடன்படிக்கை இரண்டு பிரிவினருக்கும் இடையேயான விற்பனை வரி (Tariffs) யை நீக்குகிறது. இதன்மூலம் கனடாவின் ஏற்றுமதி அதிகரிக்கப்படும். உதாரணமாக கனடா 100,000 பிரயாணிகள் பயணிக்கும் வாகனங்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யலாம். இது தற்போது அனுமதிக்கப்பட்ட அளவை விட 12.5 மடங்கு அதிகமாகும். இந்த உடன்படிக்கை மூலம் கனடாவின் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி வருடம் ஒன்றுக்கு $1.5 பில்லியனால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கனேடிய அரசின் மதிப்பின்படி இரண்டு பகுதியினருக்கும் இடையேயான வியாபாரம் CETA உடன் படிக்கையால் 20%ஆல் அதிகரிக்கும்.

இதேபோல் ஐரோப்பிய ஒன்றியத்தின் Cheese ஏற்றுமதி வருடம்தோறும் 13,000 tonnes ஆல் அதிகரிக்கப்படும். இது கனேடிய Cheese உற்பத்தியாளர்களுக்குப் பாதகமாக இருந்தா லும் கனேடிய அரசு அவர்களுக்கு சலுகை அளிக்க முன்வந்துள்ளது. இந்த CETA உடன்படிக்கையால் கனடாவின் வியாபாரம் 28 நாடுகளுக்கும் 500 மில்லியன் மக்களுக்கும் விஸ்தரிக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கை எல்லோராலும் அங்கீகரிக்கப் பட்ட பின்னர் 24 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும்.

அத்துடன் இந்த உடன்படிக்கை அமலுக்கு வந்தால் அது கனடாவில் 80,000 புதிய வேலையை உருவாக்கும் அல்லது கனேடியர்களின் சராசரி குடும்ப வருமானத்தை வருடம் ஒன்றுக்கு (தொடர்ச்சி 12ஆம் பக்கம்...)



Field Fresh Supermarket

好世界 大型超市

# Grocery store வேலை அனுபவமுள்ளவர்கள் உடனடியாக தேவை!

We are very excited about the opening of our new Grocery store at Middlefield & Steeles in December of 2016 with a talented team of co-workers!

Our full recruitment process starts immediately.
If you have experience of working at Grocery Store!


**Please Contact:**
**647-618-2068 / 647-829-8789**
**fieldfresh5661@gmail.com**













## Never Lived In! BRAND NEW CONDO

FOR SALE:1 BED + DEN - 635 SQF
$309K, 1 Underground parking + Locker.
3560 St. Clair Ave East
(Kennedy Road & St Clair, Scarborough)

- Over $4000 in upgrades form builder.
- Save $3000 development charges.
- Low condo fees $ 0.377 PSF
- Buy Before Price Goes up

**Contact: Raj @ 416-880-2932**

HIGH DEMAND DUE TO TRANSIT SERVICES:
- TTC at the FRONT DOOR
- Kennedy & Warden Subway Station Closeby.
- Walking Distance to Scarborough Go Station.

BONUS PACKAGE:
- 6 Appliances (4 Stainless Steel in kitchen and white washer and dryer)
- Granite counter tops Kitchen and Island.
- Laminate flooring throughout.
- Backsplash in Kitchen.

The Suite:
- Lofty 9' ceilings, spacious, airy light filled suites.
- Individually controlled heat & AC, metered water use.
- Dens ideal for home offices or media rooms.
- Bistro-style kitchens with Chef's island.
- Granite counter top and ceramic subway tile backsplash.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto*

Brokerage Office : B121-1396 Don Mills Rd, Toronto, ON, M3B 0A7 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



**For All Your Real Estate Services**

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

MORTGAGE IN ANY SITUATION

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

WIN UP TO
$100,000*
WHEN YOU USE
THE RIGHTBROKER™
ASK ME HOW!
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

எமது முகவரி

## 1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**



# பெரிதாக வெடிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட முரண்பாடு மெல்லத் தணிந்தது!

மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்ரம சிங்க தலைமையிலான தற்போதைய தேசிய அரசாங்கத்தில் ஏற்பட்ட பாரிய முரண்பாடு ஒன்று சத்தமின்றி அமிழ்ந்து ள்ளது. இந்த முரண்பாடு பாரியதாக வெடித்து, மைத்திரி - ரணில் மத்தியில் பிளவினை ஏற்படுத்தும் என ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மஹிந்த அணியினரு க்கு வெற்றி கிடைக்கவில்லை.

கடந்த ஒக்ரோபர் மாத நடுப்பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த சில கருத்துக்களே முரண்பா டுகள் ஏற்படக் காரணமாக அமைந்தது. ஊழல், மோசடி தொடர்பான விசார ணைகள் அரசியல் உள்நோக்கத்துடன் நடத்தப்படுவதாகவும், இதனை தன்னால் அனுமதிக்க முடியாது எனவும் கொழும்-பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந் துகொண்டு உரையாற்றுகையில் ஜனா-திபதி மைத்திரி தெரிவித்திருந்தார்.

பாதுகாப்புப் பிரிவை எக்காரணம் கொண்டும் பலவீனப்படுத்தவோ, இரா ணுவத்தினரை அபகீர்த்திக்குட்படுத் தவோ இடமளிக்க முடியாது என்றும், முன்னாள் இராணுவத் தளபதிகள் மூவர் நீதிமன்றத்திற்கு பலவந்தமாக அழைக் கப்பட்டதில் தனக்கு உடன்பாடில்லை எனவும் அவர் கூறினார்.

முன்னதாக, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ மற்றும் கடற்படைத் தளபதிகள் மூவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். கோட்டாபய சிறிது நேரம் அங்கு தடுத்து வைக்கப்பட்ட நிலையும் ஏற்பட்டது. இது தொடர்பில் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தன்னால் உடன்பட முடியாது என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

நிதி மோசடி புலனாய்வுத் துறையின ரும், குற்றத் தடுப்பு புலனாய்வுப் பிரிவி னரும் அரசியல்வாதிகளைத் திருப்தி ப்படுத்த செயற்படுவார்களாயின், தான் நேரடியாகத் தலையிட வேண்டி ஏற்படும் எனவும் ஜனாதிபதி மைத்திரி அங்கு கடும் தொனியில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி குறிப்பிட்ட மேற்படி கருத்து க்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரை நோக்கியே கூறப்பட்டது என்பதை எவரும் இலகுவில் புரிந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அரசா-ங்கத்தின் பிரதான பங்காளிகளாக இரு ந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணிலும் அவரது ஆட்களுமே எல்லா நடவடிக்கைகளு க்கும் பொறுப்பு என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் கைப்பொம்மையாக செயற்படுகின்றார் எனவும், அத்துடன் ஐக்கிய தேசியக்



கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சிதைத்து இல்லாதொழிக்கும் முயற்சி யில் ஈடுபடுவதாகவும் மைத்திரி இதற் குத் துணைபோவதாகவும் மஹிந்த ராஜ பக்ஸவிற்கு ஆதரவான அணியினர் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர். இந்த நிலையில் மைத்திரி தெரிவித்த கருத்துக்கள் பாரியதொரு பரபரப்பை அரசியல் களத்தில் ஏற்படுத்தியது.

முன்னாள் ஆட்சியாளர்கள் மீதான ஊழல், மோசடி விசாரணைகளை மேற் கொள்ளும் குற்றப் புலனாய்வுப் பிரிவு, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியன சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்கவின் பொறுப்பிலேயே உள் ளன. சாகல ரட்ணாயக்க பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நம்பிக்கைக்கு உரி யவர். எனவே, ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்களால் தேசிய அரசாங்கத்திற் குள் பிளவு ஏற்படலாம் என்று அனை-வரும் எதிர்பார்த்தனர்.

அத்துடன், சாகல ரட்ணாயக்கவின் பொறுப்பிலுள்ள சட்டம் ஒழுங்கு அமைச்சு ஜனாதிபதியின் கட்டுப்பாட் டிற்குள் கொண்டுவரப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் பல்வேறு ஊகங்கள் வெளிவரத் தொட ங்கின. ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச் சர்கள் ஜனாதிபதியின் கருத்து தொடர் பில் கொதிநிலையில் காணப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஸவின் குடும்ப உறுப்பினர்களை பாது காக்கும் நோக்கில் சட்டம் ஒழுங்கு அமைச்சை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்தால் அவரு க்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரே ரணையொன்றை முன்வைக்கப்போவ தாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா-ளுமன்ற உறுப்பினர்கள் எச்சரிக்கை-யொன்றையும் விடுத்திருந்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மைத்திரி க்கும் பிரதமர் ரணிலிற்குமிடையே நேரடி சந்திப்பொன்றும் இடம்பெற்றது. கடந்த 13-19-2016 அன்று நடைபெற்ற இச்சந்தி ப்பில் பேசப்பட்ட விடயங்கள் எவையும் வெளிப்படுத்தப்படவில்லை. 15-10-2016 அன்று பிரசெல்ஸிற்கு பயணமான பிர-தமர் ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய தேசி யக் கட்சியினரின் ஆத்திரத்தை கட்டுப் படுத்தும் வகையில் அறிவுறுத்தல் ஒன்றை விடுத்திருந்தார். தான் வெளிநா ட்டுப் பயணத்தை முடித்துவிட்டு இலங் கைக்கு திரும்பும் வரையில், ஜனாதிபதி வெளியிட்ட கருத்துத் தொடர்பில், எந்த வித விமர்சனங்களையோ, எதிர் கருத்து க்களையோ தெரிவிக்க வேண்டாம் என ஐக்கிய தேசியக் கட்சியின் சகல அமை ச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அறிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் நடத்தப் படவிருந்த சகல ஊடகவியலாளர் சந்தி ப்புக்களும் பிரதமரினால் நிறுத்தப்பட் டன. தனது வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் வரை அமைதி காக்கும்படி ரணில் கூறினார். இந்த நிலைமைகளை அவதானித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமார-ணதுங்கவும் இந்த விடயத்தில் தலை யிட்டு சமரசம் ஏற்படுத்துவதற்கு முயன் றதாகவும் செய்திகள் வெளிவந்தன.

மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்ரமசிங்கவும் இணைந்து அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட மோசமான சிக்கலாகவே இது பார்க்கப் பட்டது.

இந்த முரண்பாடுகளில் மகிழ்ச்சியடைந் தவர்களாக மஹிந்த ராஜபக்ஸ தரப் பினர் காணப்பட்டனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்திற்கு ஆதரவான கருத்துக்களை அவர்கள் வெளியிட்டனர். ஜனாதிபதி மைத்திரிக்கு காலம் தாழ்த்தியாவது உண்மை விளங் கியமை, ஒரு விசேட விடயம் என முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

சி.ஐ.டி., எப்.சி.ஐ.டி. மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு என்பன அரசிய ல்வாதிகளைத் திருப்திப்படுத்தும் வகை யில் செயற்படுவதாக இருந்தால், அவை தொடர்பில் தான் தீர்மானம் எடுக்கப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சி-றிசேன தெரிவித்துள்ள கருத்தையிட்டுறா தான் ஆச்சரியப்படுவதாகவும் அவர் கூறினார்.

## - விகிர்தன் -

முன்னாள் பாதுகாப்பு செயலர் கோட்டா பய ராஜபக்ஸ கூறுகையில், தங்கள் மீதான விசாரணைகள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய மேற்கொள்ளப்படுகி றது என்பதை தாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக தெளிவாக சுட்டிக்காட்டி வருவதாகவும், தற்போது ஜனாதிபதியும் அதேமுறையில் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப் பாளர் தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்க பதவி விலகினார். ஜனாதிபதி மைத்திரி-பால சிறிசேன தெரிவித்த கருத்துக்களே

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம். இரண்டு கட்சிகளினதும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்துவிட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் நடைபெறுகிறது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016 இல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

### முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பா ளர்களும் பின்வருமாறு

ஜனநாயகக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

CBC ஒக்ரோபர் 25 ஆம் திகதியின் கருத்துக்கணிப்பின் படி அமெரிக்க மக்களில் வாக்களிக்கத் தகுதி உள்ளவர்களில்
47.6% ஆனவர்கள் Hillary Clinton ஐ ஆதரிக்கிறார்கள்.
42.6% ஆனவர்கள் Donald Trump ஐ ஆதரிக்கிறார்கள்.
9.7% ஆனவர்கள் ஏனைய கட்சி வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள்.



கடந்த விளம்பரம் இதழ் வெளிவரும் போது நாடுதழுவிய வாக்குகளில் 5.7% அதிகப்படியான வாக்குகளைப் பெற்றிருந்த Hillary தற்போது 5.0% அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளார். நாடு தழுவிய வாக்கெடுப்புக்களின் வீதம் ஜனாதிபதியைத் தெரிவு செய்வது இல்லை. மாநிலங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களே ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறார்கள்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்ய 270 தெரிவாளர்களது ஆதரவு தேவை. Hillary இற்கு 323 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்கக்கூடிய நிலையில் தற்போது இருக்கிறார். Donald இற்கு 215 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்க கூடிய நிலையிலேயே தற்போது இருக்கிறார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான மூன்றாவதும் இறுதியுமான விவாதம் 2016 ஒக்ரோபர் 19இல் Nevada பல்கலைக்கழகம், Las Vegas இல் நடைபெற்றது. மற்றைய விவாதங்களைப் போல் அல்லாது இவ்விவாதம் முதல் 45 நிமிடங்களும் இருவரும் தமது கொள்கைகள் பற்றி விவாதிப்பதில் ஆர்வமாகவும் தீவிரமாகவும் இருந்தனர். உச்ச நீதிமன்ற நீதிபதி நியமனம், அரசியல் அமைப்பின் இரண்டாவது திருத்தம் (அமெரிக்க மக்கள் துவக்கு வைத்திருப்பதற்கான உரிமை), கரு அழிப்பு, குடிவரவு, அகதிகளை அனுமதித்தல், தகுந்த குடிவரவுப் பத்திரம் அற்றோரை நாடு கடத்தல் போன்ற விடயங்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

வெளிநாட்டுக் கொள்கைகள் விடயத்தில் விவாதம் சூடுபிடித்து விவாதத்தை நடத்துபவரின் கட்டுப்பாட்டை சிலசமயம் மீறிச் சென்றன. ரஷ்ய அரசினுடைய, Putin உடைய கைப்பாவை (Puppet) ஜனாதிபதியாகத்தான் Trump இருப்பார் என Clinton கூற அதற்கு Trump நான் கைப்பாவை அல்ல நீதான் கைப்பாவை என்றார். Trump இன்னொரு தருணத்தில் மிகவும் மோசமான பெண் (Nasty women) என Clintonஐ கூறினார்.

நடுவரின் கேள்வியான தேர்தல் முடிவை நீங்கள் வென்றாலும் தோற்றாலும் ஏற்றுக் கொள்வீர்களா என்பதற்கு Trump பதிலளிக்க மறுத்து விட்டார். முதலில் முடிவு வரும்போது பார்த்துக்கொள்வோம் என்றார். மீண்டும் நடுவர் திரும்பி அதேகேள்வியைக் கேட்க Trump நான் இதற்குப் பதில் அளிக்காமல் உங்களை ஐயத்துடன் (Suspense) வைத்திருக்க விரும்புகிறேன் என்றார். விவாத்தின் பின் பெரும்பாலான ஊடக வியலாளர்களின் கண்டனத்திற்கு உரிய விமர்சனமாக Trump தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்வேன் என்று கூறமறுத்தது இடம்பெற்றிருந்தது. இது அமெரிக்காவின் ஜனநாயக மரபிற்கே ஓர் இழுக்காகக் கருதப்பட்டது.

வழமைபோல் விவாதத்திற்கு மறுநாள் நடைபெற்ற ஆய்வில் Toronto Star இன் அரசியல் ஊடகவியலாளர் Daniel Dale இன் கருத்தின்படி 35 நிமிடம் 41 செக்கன் விவாதத்தில் பேசிய Donald Trump 37 தவறான தகவல்களை வெளியிட்டிருந்தார். அதாவது கிட்டத்தட்ட Donald Trump பேசிய ஒவ்வொரு நிமிடமும் ஒரு தவறான தகவலைக் கூறியுள்ளார். 41 நிமிடம் 46 செக்கன் விவாதத்தில் பேசிய Hillary Clinton நான்கு தவறான தகவல்களை வெளியிட்டிருந்தார். அதாவது கிட்டத்தட்ட Hillary Clinton பேசிய ஒவ்வொரு பத்து நிமிடமும் ஒரு தவறான தகவலைக் கூறியுள்ளார்.

இவர்களுடைய மூன்று விவாதங்களையும் தொகுத்து வெளியிட்ட Toronto Star ஊடகம், மூன்று விவாதத்திலும் சேர்த்து Donald Trump 104 தவறான தகவல்களையும் Hillary Clinton 13 தவறான தகவல்களையும் கூறியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

### 2016 நொவம்பர் 08இல் நடைபெறும் ஏனைய தேர்தல்கள்

அமெரிக்காவில் தேர்தல்கள் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை (அதாவது இரட்டை எண்வரும் வருடங்களில்) நொவெம்பர் 1ஆம்திகதிக்குப் பின்னர் வரும் முதலாம் செவ்வாய்க்கிழமைகளில் நடைபெறும். இதில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். அதாவது அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் (House of representatives) பதவிக்காலம் இரண்டு வருடங்கள் ஆகும். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 435. இந்த 435 அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலும் எதிர்வரும் 2016 நொவெம்பர் 08இல் நடைபெற உள்ளது.

தற்போதைய நாடாளுமன்றத்தில் குடியரசுக்கட்சியை சேர்ந்த 246 உறுப்பினர்களும் ஜனநாயகக்கட்சியை சேர்ந்த 186 உறுப்பினர்களும் வெற்றிடமாக 3 ஆசனங்களும் உள்ளன. தனது வெற்றி நிச்சயம் என்ற நிலையில் Hillary Clinton நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயகக்கட்சி

உறுப்பினர்கள் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற குறைந்தது 218 ஆசனங்களைப் பெறவேண்டும். இதைவிட அமெரிக்க மேற்சபை (Senate) யில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களது பதவிக்காலம்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



# குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்!
## குழப்ப சக்திகள் தொடர்பில் அவதானம் வேண்டும்!




- ஆதித்தன் -

அண்மையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் மிகவும் துயரமான-தொரு நிகழ்வு. பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் அவர்கள் உயிரிழந்த விதம் என்பது அதிர்ச்சி தரும் ஒரு விடயம். இச்சம்பவம் இன்னமும் ஒரு கொதிநிலையிலேயே உள்ளது.

குறித்த மாணவர்களது பெற்றோர் தங்களது புதல்வர்களின் மறைவையொட்டி ஆற்றவியலாத துயருடன் இருக்கின்ற நிலையில், அவர்களுடன் ஒன்றாகப் பயின்ற சக மாணவர்கள் கொதிப்புடனேயே காணப்படுகின்றனர். இறுதி நிகழ்வுகளில் குறித்த மாணவர்களின் பெற்றோர் உறவினரின் அழுகை ஒலியை விடவும், சக மாணவர்களின் கதறல் ஒலியே அதிகமாகக் கேட்டது. மாணவர்கள் நடத்திய ஹர்த்தால் வட மாகாணத்தை முழுமையாக முடக்கியது.

இழக்கப்பட்ட உயிர்களை எவ்விதத்திலும் மீளப்பெற முடியாது. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகளை வழங்கினாலும் அந்த இழப்புகளை ஈடுகட்ட முடியாது. அவர்களின் உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுடன் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என்பதுமே இன்றுள்ள எதிர்பார்ப்பு.

இன்று தமிழ் பிரதேசங்களில் அரசாங்கப் படைகளை விட வேறு எவரிடமும் ஆயுதங்கள் இல்லை. ஆயுதங்களை வைத்திருக்கும் பாதுகாப்பிற்குப் பொறுப்பான தரப்பினர் அவற்றை அவதான-மாகப் பயன்படுத்த வேண்டும். அது மட்டுமன்றிப் பாதுகாப்புக் கடமையிலுள்ளவர்கள் அடாவடித்தனங்களில் ஈடுபடக்கூடாது.

அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டதைப் போல, தமிழ் பிரதேசங்களில் இராணுவம் தேவையில்லை பொலிஸாரே போதும் என்று கூறிவரும் நிலையில், பொலிஸார் மீதும் தற்போது நம்பிக்கையற்ற நிலை தோன்றி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ள சம்பவம் பாரதூரமானது எனினும் கடந்த சில வாரத்திற்கு முன்னர் கிளிநொச்சியில் ஒருவர் பொலிஸாரால் சங்கிலியால் தாக்கப்பட்ட சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தலை, முகம் முழுவதும் இரத்தம் வழிய அந்த நபர் கதறியழுத காணொளிக் காட்சி சமூக வலைத்தளங்களிலும், சில இணையத்தளங்களிலும் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறாகப் பொலிஸாரால் கண்மூடித்தனமாகப் பொதுமக்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அண்மைய காலமாக, அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்தாமையும், இவ்வாறான தவறு செய்தவர்களைத் தண்டிக்காமல் விட்டதும் தொடர்ந்து அடாவடித்தனங்கள் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

மாணவர்கள் உயிரிழந்த சம்பவத்தை அரசியலாக்குவதை அல்லது, அரசியல்வாதிகள் இதனை தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்துவதை தற்போது அவதானிக்க முடிகின்றது. ஆனால், பல்கலைக்கழக மாணவர்கள் இதில் அவதானமாகவே நடந்து கொண்டுள்ளனர். மாணவர்களின் மரணச்சடங்குகளில் கூட அரசியல்வாதிகள் உரையாற்றுவதற்கு சக மாணவர்கள் அனுமதிக்கவில்லை. எனினும், நிலைமையைக் குழப்புவதற்குப் பல்வேறு தரப்பினர் முயன்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

மாணவர்கள் உயிரிழந்த பின்னர் சுன்னாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவமும், அதனைத் தொடர்ந்து அச்சம்பவத்தை உரிமை கோரி 'ஆவா' எனப்படும் ரவுடிக் குழுவின் பெயரால் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடக்கூடிய விடயங்களாகும்.

சுன்னாகத்தில் இடம்பெற்ற புலனாய்வாளர்கள் மீதான வாள்வெட்டுச் சம்பவத்தை மாணவர்களின் கொலைக்குப் பழிவாங்கும் ஒரு விடயமாகச் சித்தரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

உண்மையில் மாணவர்களின் மரணத்திற்கும் இந்த வாள்வெட்டுச் சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால், சந்தர்ப்பத்தை சில சக்திகள் பயன்படுத்திக் குழப்ப நிலையை ஏற்படுத்த முனைவதை அவதானிக்க முடிகின்றது. 'ஆவா' குழு என்ற பெயரில் துண்டுப்பிரசுரங்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அத்துண்டுப்பிர-சுரங்களில் உயிரிழந்த மாணவர்களின் படங்களுடன் 'அசுத்தங்களைகளை-வோம்' என்று குறிப்பிட்டுக் குறித்த வாள்வெட்டிற்கு உரிமையும் கோரப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் யார் உள்ளார்கள் என்பது யாழ். மக்களுக்குத் தெளிவாகவே தெரியும்.




கடந்த ஆட்சிக் காலத்தில் இவ்வாறன காரியங்கள் அதிகம் நடைபெற்றன. பொதுமக்கள் ஜனநாயக ரீதியாகப் போராட்டங்களை நடத்தும் இடங்களுக்குப் புலிக்கொடியுடன் இலக்கத் தகடற்ற மோட்டார் கைக்கிள்களில் வந்து சென்ற தரப்பினரே இந்த 'ஆவா' பிரசுரக் கைங்கரியத்தையும் மேற்கொண்டுள்ளனர். அவ்வாறானதொரு துண்டுப்பிசுரத்தை எந்தவொரு அச்சகத்தினரும் அச்சிட்டு வழங்க முன்வர மாட்டார்கள். அத்துடன், துணிச்சலாக அப்பிரசுரங்கள் சில பகுதிகளில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதனையும் வேறு எவரும் சாதாரணமாகச் செய்ய இயலாது. எனவே, இதனை யார் செய்திருப்பார்கள் என்பது பொதுமக்களுக்குப் புரியும். அத்துடன் 'ஆவா' குழு என்பது யாழ்ப்-பாணத்தில் கடந்த காலங்களில் பாரிய குற்றச்செயல்களிலும், வாள்வெட்டு போன்ற வன்முறைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளது. இக்குழுவைச் சேர்ந்தவர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் கடும் நிபந்தனைக-ளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது, பொலிஸாருக்குப் பதிலாக விசேட அதிரடிப்படையினர் யாழ்ப்பாணத்தில் களமிறக்கப்பட்டுள்ள நிலையில், 'ஆவா' என்ற குழுவினர் பற்றிய விசாரணைகளைப் பொலிஸார் தீவிரப் படுத்தியுள்ளதாகவும் செய்திகள் வெளி வருகின்றன. எந்தவொரு தனிநபரை-யோ அல்லது குழுவையோ சட்டத்தைக் கையிலெடுக்க விடமாட்டோம் என்று யாழ்ப்பாணப் பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக்காலமாக இருந்திருந்தால் உயிரிழந்த மாணவர்களின் கைக-ளில் குண்டுகளோ, துப்பாக்கிகளோ திணிக்கப்பட்டு அவர்கள் விடுதலைப் புலிகளை மீளுருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்றும், பொலிஸார் மீது தாக்குதல் நடத்த வந்த நிலையிலேயே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்றும் கதை புனையப்பட்டிருக்கும். ஆனால், இம்முறை அவ்வாறு நடைபெறவில்லை.

இந்தச் சம்பவத்திற்குத் தமிழ் அரசியல்வாதிகள் கண்டனங்களைத் தெரிவித்து வரும் நிலையிலும், அரசாங்கத் தரப்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி கூறப்பட்டு வருகின்ற நிலையிலும், பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நியாயமானதாகவும் பொறுப்புத்தன்மை மிக்கதாகவும் இருப்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

பொலிஸ் அதிகாரிகள் தரப்பில் தவறு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர ஒப்புக் கொண்டுள்ளார். அங்கு, கொள்ளைச் சம்பவங்களோ, குழுவொன்றால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களோ அல்லது உயிரச்சுறுத்தல் போன்ற துப்பாக்கிச் சூடு நடத்தும் அளவிற்கு இக்கட்டான சூழ்நிலையோ ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.


Sold
$515,000
4+2 Bedrooms, 5 W Room
Walk Out To Deck,
Hard Wood Floor Throughout Main Floor
$539,000
3+2 Bedrooms, 2 W Room
Finished Basement And
Separate Entrance.
$539,900
3 Bedrooms, 2 W Room
Bright Home W/Finish Bsmnt In
Desireable Neighbourhood,
$599,000
4 Bedrooms, 1 W Room
Separate Entrance To Basement
& More. Walk To The Beach, Go Train,
$599,900
3+1 Bedrooms, 4 W Room
Built On A Family Friendly Court.
Basement Has Separate Entrance
$599,900
3 Bedrooms, 3 W Room
Pool. Gorgeous Chocolate Hardwood
OnMain/Stairs & 2nd
Sold
$617,000
4 Bedrooms, 4 W Room
All Window Coverings,
Range Hood
$625,000
4 Bedrooms, 3 W Room
Gorgeous Home Built By
Midhaven.Cert Green Home Design
$629,900
4 Bedrooms, 3 W Room
Beautifully Kept Mattamy Home
Minutes Away From Mount
Pleasant Go Station
$649,900
4 Bedrooms, 3 W Room
HQuality Brook Field Berkley
Model In Preferred N/E Oshawa
$769,900
4+3 Bedrooms, 5 W Room
Solid Oak Staircase, Skylight.
Oversized Master Br W/Sitting Area.
Sold
$738,000
4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen W/Granite/
Backsplash & Floating Island
$750,000
4 Bedrooms, 4 W Room
Open Concept Home. Separate Living &
Dining With Granite Counter Tops
$829,000
3 Bedrooms, 3 W Room
Open Concept Kitchen With Mosaic
Backsplash, Quartz Countertops
$849,000
3+1 Bedrooms, 4 W Room
Finished Basement
With Bedroom And Sep. Entrance.
KZG 647-200-5833
Sell your home
faster
and more
money
RE/MAX
Platinum
Club
Award
ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC
Sales Representative
Direct 416 - 276-1225
Email: esrinathan@trebnet.com
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770
Your Home Sold In 30 Days or We buy it
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads
every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!

oshawa




Taunton/Townline




Ritson/ Taunton






**INVESTMENT**

Rented

Retail Unit Any Business possible close to all major retails..

$249K... Mortgage available

MARKHAM RD / 14 TH AVE

Hwy 48/Lakeridge Rd



Approx 10 Acre $249k

Salem/Taunton




4 bm 4 wsrm home $749k

16th Ave/Main St N




## TORONTO'S World Class Lake Condos, Prestige Ownership VIP ACCESS CALL ME!! Cash Back Available




**World Class Lake Condos**

**Prestige Ownership**

**VIP ACCESS CALL ME!!**

***Scarborough best Residential location with all amenities***







# Pat Pushpakanthan

Real Estate Broker

**416-894-1187**

Our MLS listing include:

- Free Professional Photography
- Free Professional virtual tour
- Free custom website of your home
- Free Home Staging
- Free Feature Sheets
- Free UTube Video
- Free Online Marketing............. , Open house and more..

## Hall of Famer

**PAT WILL BEAT ANY DEAL*!!**

*To buy Home, New Condos, commercial, Farms, Lands..*

*Call Me For Free service!*



Century 21 AFFILIATE REALTY INC BROKERAGE*

OFF: 416-290 1200

nhome2025@gmail.com

**Profit from 15 years of Real estate Success!**

rom , when you buy a house more than $ 400K house from me ,^Not intended to solicit existing buyers and sellers, under contract * some conditions apply, no other deal combined

# வீட்டைத் தெரிவு செய்யும்போது நாம் கவனிக்க வேண்டியவை!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர்: *474*

ஒரு வீட்டை தெரிவு செய்யும்போது எப்படியான விடயங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும் என்பதனைப் பற்றிப் பார்ப்போம்.

வீட்டைத் தெரிவு செய்யும்போது இரண்டுவிதமான முக்கிய விடயங்களைப்பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

முதலாவதும் முக்கியமானதும் வீடு/மனை அமைந்துள்ள இடம் (Location). உதாரணமாக Toronto இல் சில இடங்களின் பெயர் சொன்னதும் அந்த இடங்களின் மதிப்புத் தெரியவரும். அவை Bridle Path Area, Rosedale Forest Hill இவை ஒன்றிரண்டு. இப்படிப் பல இடங்களை உதாரணமாக கூறலாம். வீடு அமைந்துள்ள இடம் மிக முக்கியமானதாகும்.

வீட்டின் விலையை நிர்ணயிக்கும் முதல் காரணி - வீடு அமைந்துள்ள இடம். இதனை விட நாம் வாங்கும் வீடு அமைந்துள்ள இடம் பாடசாலைகள் பஸ்தரிப்பு இடங்கள், கடைகள் மேலும் இதுபோன்ற வசதிகள் அமைந்த இடத்திற்கு ஒரு குறிப்பிட்டளவு தூரத்தில் வீட்டை தெரிவு செய்வது நல்லது.

ஆனால், அதற்கு மறுதலையாக சில இடங்களில் வீடு வாங்குவதை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும்.



1. பெருந்தெருக்களிற்கு (Highways) அண்மையில்.
2. Hydro (Power) லைன்னிற்கு அண்மையில்.
3. கூடுதலாக Apartments, Social Housingக்களிற்கு அண்மையில்.
4. வீட்டின் வாசலில் தெருக்கள் சந்திப்பது.
5. இடுகாட்டிற்கு அண்மையில்.
6. பாடசாலைக்கு முன் அல்லது பக்கத்தில் (முக்கியமாக High school பகுதி)

வீட்டிற்குள் முக்கியமாக எவற்றை கவனிக்க வேண்டும் என்பதனைப் பற்றிப் பார்ப்போம்.

1. கூரை (Roofing - Shingle)
2. அத்திவாரம் (Foundation)
3. எலெக்ரிக்கல் (Electrical) வேலை
4. தண்ணீர் பாயச் செய்தல் (Plumping)
5. சூடாக்குதல், குளிரச் செய்தல் (Heating, Cooling)
6. நிலஅமைப்பு (Flooring)
7. ஜன்னல், சாளரங்கள் (Windows)
8. குளியலறை (Washroom)
9. நீர்கசிதல், உள்ளே வருதல். (Leaking)
10. வீட்டிற்கு வெளியேயுள்ள நிலத்தின் பராமரிப்பு. (Grading)

1. **கூரை** (Roofing - Shinglds)
வீட்டின் கூரை என்று கூறும்போது கூரையில் மேலே போடப்பட்டு இருக்கும் Shinglesயே குறிப்பிடுகிறோம். இச் Shingles 15 வடங்களிலிருந்து 25 வருடங்கள் வரை பழுதாகாமல் இருக்கும். அதற்கு அப்புறம் மாற்ற வேண்டி இருக்கும். ஆனாலும் இந்த Shingles தராதரத்தைப் பொறுத்தது. சில தரமானவை. நீண்டகாலம் வரை பழுதடையாமல் இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கும். அனேகமாக Shingles மாற்றிடு செய்யும்போது முதல் தடவை போட்டத்திற்கு மேலாக இரண்டாவது தடவையாகவும் Shingles போடப்படும். அதற்கு அப்புறம் Shingles மாற்றும்போதே, ஏற்கனவே இருக்கும் இருபடைகளையும் நீக்கியபின்பே மூன்றாவது படை (Layer) போடப்படும். அப்பொழுது Shingles இற்கு கீழே இருக்கும் பலகைகள் தேவைக்கேற்ப மாற்றப்படும்.

**அத்திவாரம்** (Foundation & Granding)
வீட்டின் அத்திவாரத்தில் பெரிய வெடிப்புக்கள் இருக்கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். சின்னச் சின்ன வெடிப்புக்கள் பொதுவாக எல்லா வீட்டிலும் இருக்கும். அவை பெரிய விடயங்கள் அல்ல. ஆனால் பெரிய வெடிப்புக்கள் முக்கியம். இதே வெடிப்புக்கள் உள்ள இடத்தில் வீட்டின் உட்பகுதியில் தண்ணீர் இருக்கின்றதா என்பதைக் கவனிக்க வேண்டும். சின்ன வெடிப்புக்கள் இருப்பின் வீட்டின் வெளிப்புறத்தில், வீட்டின் அத்திவாரச் சுவரிற்கு களிமண்ணைப் போட்டு தண்ணீர் உள்ளே வரும் சந்தர்ப்பத்தை தவிர்த்துக்கொள்ளலாம். இருந்தும் அத்திவாரச்சுவரில் எவ்வாறான வெடிப்பு என்பதனை கவனமாக அவதானிப்பது நல்லது. மேலிருந்து கீழ்போவது, இலகுவாக திருத்தக்கூடியது. குறுக்காக வெடிப்பு இருந்தால் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். அனுபவமிக்க வீடு சோதிப்பவரின் அறிவுறுத்தலை நிச்சயம் எடுத்தல் வேண்டும்.

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Footing, Foundation, Framing & Building Envelope

By Experienced Fine Italian Craftsmen & Tradesmen $110/sq ft

(Interior Finishes, Fixtures, Appliances and Painting Extra)



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு


அனுபவம் நிறைந்த, நாணயமான, தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial & Commercial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

Purchase of the Lot, Building Design, Municipal Fees, and Site Preparation are Not Included in Our Price

# அத்தனைக்கும் ஆசைப்படு!



சத்குரு வாசுதேவ்

கடவுள் இருக்கிறார் என்று யாரோ சொன்னதற்காக நம்புவதோ, கடவுள் இல்லை என்று யாரோ சொன்னதற்காக மறுதலிப்பதோ எப்படிப் புத்திசாலித்தனமாகும்?

கடவுளை நம்புவதும் நம்பாததும் கடவுளின் பிரச்சினை இல்லை. அது முழுக்க முழுக்க உங்கள் பிரச்சினை. ராமர் இருந்தாரா, கிருஷ்ணர் வந்தாரா, ஜீசஸ் இருந்தாரா, நபிகள் வந்தாரா என்பதா பிரச்சினை? உங்கள் அனுபவம் என்ன? யூதர்கள் கடவுளுடன் நேரடித் தொடர்பு வைத்திருப்ப தாகச் சொல்லிக் கொள்பவர்கள். அவர்களைப் பற்றி ஒரு வேடிக்கைக் கதை உண்டு.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru:** www.innerengineering.org

யூதர்களின் தலைவனான ஜோஷ்வா கோல்டுபெர்க் வருடத்துக்கொரு தடவை சொர்க்கத்துப் போய்க் கடவுளுடன் அமர்ந்து விருந்து உண்ணும் உரிமை பெற்றிருந்தான். அப்படியொரு முறை கடவுளுடன் விருந்துக்கு அமர்ந்திருந்த நேரம்... வருடா வருடம் மாற்றமில்லாமல் வறட்டு ரொட்டிகள் தான் விருந்துக்குப் பரிமாறப் படுவது வழக்கம்.

'கடவுளே, ஒரு சந்தேகம் என் மனதை அரித்துக் கொண்டிருக்கிறது' என்று கேட்டுவிட்டு, ரொட்டியைக் கஷ்டப்பட்டு மென்றான் ஜோஷ்வா.

கேள், மகனே!'
'உங்கள் சாம்ராஜ்யத்தில் உங்களுக்கு நெருக்கமானவர்கள் நாங்கள் மட்டும் தானா? வேறு யாராவது உண்டா? என்று அடுத்த ரொட்டித் துண்டத்தை விழுங்கித் தண்ணீரைத் தொண்டையில் சரித்துக் கொண்டான்.

'சந்தேகமே வேண்டாம். வேறு யாருக்கும் அந்தச் சிறப்புரிமை இல்லை. அதனால் தான் உன்னை மட்டும் விருந்துக்கு அழைத்தேன்'.

ஜோஷ்வா கையில் எடுத்த ரொட்டியைக் கீழே போட்டுவிட்டு எழுந்து, 'எத்தனை நாட்களுக்கு எங்களுக்கே இந்த அவஸ்தை? வேறு யாரையாவது உங்களுக்கு நெருக்கமானவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடாதா?' என்றான் கோபமாக.

இப்படிக் கடவுளுக்கு நெருக்கமாக இருப்பதாகச் சொல்லிக் கொள்பவர்களுக்குத்தானே அதிக வேதனை?

இவர்கள் கடவுள் என்பதன் உன்னதத்தைப் புரிந்துகொள்ளவில்லை. கடவுளைப் பற்றிய உண்மையான அனுபவங்களைப் பெற்ற தில்லை. ஆனாலும் கடவுளுக்கும் மற்றவ ருக்கும் இடையில் இடைத்தரகர்களாக இருந்து ஆதாயம் தேட, இவர்கள் போடும் நாடகங்கள் சகிக்க முடியாதவை.

கடவுளை நீங்கள் முழுமையாக நம்பி வாழ்ந்திருக்கிறீர்களா? சிலர் இருக்கிறார்கள். நெருக்கமானவர்களுக்கு உடல் நிலை மோசமாயிருந்தால் கடவுளிடம் வேண்டிக் கொள்வார்கள். அப்படியும் அவர்கள் பிழைக்கவில்லை என்றால் 'கடவுள் என்பதெல்லாம் பொய்' என்று வீட்டில் இருக்கும் கடவுள் படங்களை எல்லாம் சுழற்றி விட்டெறிவார்கள். தனக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டும் என்று கேட்டு அது நடக்கவில்லையென்றால் கடவுளே இல்லை சொல்வார்கள்.

வளர்க்கப்பட்ட விதத்திலும் உங்களுக்குள் விதைக்கப்பட்ட விதத்திலும்தானே உங்களுக்குக் கடவுளை நம்பத் தெரிந்திருக்கிறது?

கடவுள் இருக்கிறார் என்பது ஒரு நம்பிக்கை. இல்லை என்பது இன்னொரு நம்பிக்கை. இருக்கிறாரா, இல்லையா என்பது உங்களுக்குத் தெரியாது என்பதே பட்டவர்த்தனமான உண்மை.

எனக்குத் தெரியாது என்று எப்போது தைரியமாக ஒப்புக்கொள்கிறோமோ, அப்போதுதானே எதைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு முழுமையாகக் கிடைக்கும்.!

வெறும் நம்பிக்கைகளை வைத்துப் பின்னப் படும் கற்பனைகளை எதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டும்? கடவுளைப் பற்றி அறிந்துகொள்ளும் தாகம் உண்மையிலே யே இருந்தால், மற்றவர்கள் சொல்லிக் கொடுத்ததைக் குருட்டுத்தனமாக நம்பு வதை விட்டுவிடுங்கள். கடவுள் இருக்கி றாரா என்று நீங்களே தேடுங்கள். உங்கள் தேடலை உங்களிடமே ஆரம்பியுங்கள்.

எல்லையற்ற கடவுள் என்றொருவன் எல்லா இடங்களிலும் இருப்பது உண்மையானால், அவன் உங்களுக்குள்ளும் இருக்க வேண்டுமே? உருவமாகத் தேடாமல் கடவுள்தன்மை என்பதை முதலில் உங்களுக்குள் தேடிப் பாருங்கள். உங்களுக்குள் கடவுளைக் கவனித்து அனுபவித்து விட்டால், அப்புறம் அவன் அங்கும் இங்கும் எங்கும் இருக்கலாம் என ஒப்புக் கொள்ளலாம்.

ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்குப் புத்திசாலித்தனமாக வாழ்க்கையை நடத்தத் தெரிந்திருந்தால், கடவுள் இல்லாமலும் சுகமாக வாழலாம். வாழ்க்கையைப் பற்றிப் புரிந்து கொள்ளாமல், மூடத்தனமாக வாழ்பவராக இருந்தால் பூஜை அறையில் எத்தனைக் கடவுள் படங்களைத் தொங்கவிட்டாலும் புண்ணியம் இல்லை.!

**_4 day Inner Engineering Program_**

*led by an Isha teacher trained by Sadhguru in Scarborough and Mississauga from November 03rd to 06th*

*Program Venue*

***Princess Banquet***, 3330 Pharmacy Avenue, Scarborough (Toronto), ON M1W 3V8

***Park Inn by Radisson***, Toronto Airport West, 175 Derry Road East Mississauga (Toronto), ON L5T 2Z7

***Program schedule***

Program timings are as follows for each day:

**Thursday Nove 03rd: 6:30PM - 9:45 PM** **Friday Nove 04th : 6:30PM - 9:45 PM**
**Saturday Nove 05th : 8:30AM - 7:00 PM** **Sunday Nove 06th: 7:30AM - 7:00 PM**

**Contact Information**

*Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/total*




## கனேடிய...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

$1,000 ஆல் அதிகரிக்கும் என இவ் உடன்படிக்கை சம்பந்தமாக நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கை கூறுகின்றது. 2016 ஒக்ரோபர் 27 இல் நடைபெற்ற கலந்துரையாடலில் பெல்ஜியம் பிரதமர் Charles Michel உம் Flemish பிரதேசத்தின் தலைவர் Geert Bourgeois உம் Wallonia பிரதேசத்தின் தலைவர் Paul Magnette இற்கு CETA வைப் பற்றி விளக்கிய பின்னர் அவர் CETA யை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார். அவர் ஊடக வியலாளர் மாநாட்டில் Wallonia பிரதேசம் CETA தொடர்பான கேள்விகளுக்கு விடை காணும் முகமாக தங்களிடையே ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதனால் தமது பிராந்திய அரச சபையில் விரைவில் CETA இற்கு ஆதரவு அளிப்பதாக தீர்மானம் எடுப்போம் என்றார். அதன் பின்னர் பெல்ஜியம் மத்திய அரசில் CETA இற்கு ஆதரவான தீர்மானம் நிறைவேற்றப்படும். இதன் பின்னரே கனடாவிற்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமான இறுதி உடன்படிக்கை கையொப்பம் இடப்படும். கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணைக்குழுவின் தலைவர் Jean Claude



Juncker உம் 2016 ஒக்ரோபர் 31 ஆம் திகதி Brussels இல் கனடாவிற்கும் ஐரோப்பியஒன்றியத்திற்கும் இடையேயான வர்த்தக உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். இவ் உடன்படிக்கை அமல்படுத்தபட முன்னர் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும். இறுதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட முன்னர் 1,600 பக்கங்களைக் கொண்ட இவ் ஒப்பந்தத்தின் இறுதி வடிவம் பொதுமக்கள் பார்வைக்கு வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மார்க்கம் முதியோர் சங்க ஆண்டுவிழா

மார்க்கம் வில்கிளே கல்லூரி மண்டபத்தில் மார்க்கம் முதியோர் சங்கத்தின் வருடாந்த விழா நடைபெற்றது. இங்கு மார்க்கம் மாநகர சபை உறுப்பினரான திருமதி. நிர்மலா ஆம்ஸ்றோங், மற்றும் திருமதிகளான சிவசுப்பிரமணியம், பத்மநாதன், பொன்னம்பலம், சற்குணம் ஆகியோர் மங்கல விளக்கேற்றி விழாவினை ஆரம்பித்து வைத்தனர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. லோகன் கணபத கூறுகையில் "இன்று நடைபெறும் மார்க்கம் தமிழ் முதியோர் சங்கத்தின் ஆண்டு விழாவில் பொக்ஸ் குறூவ் முதியோர் சங்க அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தமை மிக்க மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஒற்றுமையே எமது இனத்தின் பலமாகும். தமிழர்களாகிய நாம் எமது பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றினைப் பேணுவதன் மூலம் எமது இனத்தின் அடையாளத்தினைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த ஆண்டு விழாவினை 72 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டு வரும் 600 ஆசனங்களைக் கொண்ட புதிய மண்டபத்தில் கொண்டாடலாம். மார்க்கம் வாழ் தமிழ் மக்கள் ஸ்ரோவில் வைத்திய சாலைக்கு இரண்டு லட்சத்தி ஐம்பதாயிரம் டொலர் நிதியுதவி செய்துள்ளனர். அதனால் அங்கு விரைவில் தமிழர்களின் பெயரில் ஒரு 'வாட்' திறக்கப்பட இருக்கிறது. இவ்வாறு நம்மவர்கள் இங்கு அரசியல், சமூக விடயங்களில் தோள் கொடுத்து வருவது அத்தியாவசியமாகும்' என்றார்.

ஸ்ரோவில் நகர மேயரும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். அவர்களிருவரும் மேடையில் வைத்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கட்டனர். திருமதி நிர்மலாவின் உதவியாளரான திருமதி நீரா சக்ரபோதி மற்றும் இந்திய வம்சா வழியைச் சேர்ந்தவரும் ஆபிரிக்காவில் வாழ்ந்தவருமான தமிழ் பொலிஸ் அதிகாரியான திரு. றிக்கி வீரப்பனும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர். யோர்க் பிரதேச பொலிஸ் பிரிவில் ஐந்து தமிழ் பொலிஸார் பணியாற்றி வருவதாகத் திரு. லோகன் கணபதி கூறினார்.




LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

### வீரகேசரி மூர்த்தி

சிறுவர், சிறுமிகளின் ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தன. முதுபெரும் கலைஞரான திரு. இராசரெத்தினம் அவர்களின் "உதிரும் சருகுகள்" என்ற யதார்த்தபூர்வமான நாடகம் சகலரையும் கவலைகளை மறந்து வாய் திறந்து சிரிக்க வைத்தது. சிறுவர், சிறுமிகளின் நடனங்கள், உரைகள் ஆகியனவும் இடம் பெற்றன. திருமதி லீலா சிவானந்தன் அறிவிப்பாளராக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

INCOME PROTECTION INSURANCE
வருமான பாதுகாப்பு காப்புறுதி

- நாங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் பாதுகாப்போம்.
- We can protect you and your family!
- நீங்கள் சுகவீனமுற்றதனாலோ அல்லது காயமடைந்ததனாலோ வேலை செய்ய முடியாவிட்டால் இந்தக் காப்புறுதி உங்கள் வருமானத்தை ஈடு செய்யும்.
- If you are unable to work due to injury or illness replace your income with disability insurance
- இந்தக் காப்புறுதி ஆயுள்காப்புறுதியைப் போலவே மிகவும் முக்கியமானது.
- It's just as important as Life Insurance

- 100% return of premium those who are under 40 years old(some conditions apply)
- We can cover up to $10,000 per month.
- We are specializing in coverage for truck drivers, Real Estate agents, Mortgage professionals, self-employed and construction workers.
- Also we can cover your fixed business expenses if you are unable to work.
- Included travel insurance for the family. 5 Million Per person / 60 days per trip. Unlimited trips per year
- Extended Medical $100,000



Nimal Subramaniam
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company

UC LaCapitale iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# இயற்கையின் இரகசியங்கள்


## (யாவருக்குமான அறிவியல்)

# அந்த மூன்று நிமிடங்கள்

நுழைவாயில்

எங்களது வாழ்க்கையில் எத்தனையோ 'அந்த மூன்று நிமிடங்கள்' வந்து போய் விட்டன. அவற்றில் எந்த 'அந்த மூன்று' நிமிடங்கள் இதுவென நீங்கள் கேட்கலாம். நீங்களும் நானும் தோன்றுவதற்குக் காரணமான, இயற்கையின் ஆரம்பமான அந்த மூன்று நிமிடங்களைப் பற்றித்தான் பார்க்கப் போகின்றோம். அதாவது எங்களது புடவியின் (பேரண்டம் அல்லது பிரபஞ்சம் என்பார்கள்) முதல் மூன்று நிமிடங்களையும்தான் இங்கே நாம் பார்க்கப் போகிறோம். அப்படியாயின் இது பெரும் அறிவியல் விடயமாக இருக்கப் போகிறதே, எங்களாற் புரிந்து கொள்ள முடியுமா? என்றெல்லாம் யோசிக்கத் தேவையில்லை. எங்களது மட்டத்தில் இருந்து இதனைக் கவனிக்கப் போகின்றோம்.

நானறிய நாங்கள் யாவருமே யதார்த்தமாகச் சிந்திப்பவர்கள்தான். இருப்பினும் சில விடயங்களைக் கண்டும் காணாமற் போய்விடுகின்றோம். அதனால், பின்னராக வருகிற காலங்களில் அவை பெரிய விடயங்களாக எங்களுக்குத் தெரிகின்றன. அந்த வகையில் அமைந்ததுதான் அறிவியலும். உள்ளே என்ன இருக்கிறது எனத் துருவிப் பார்க்கக் கூடிய தகுதியிருந்தும், அன்று தவற விட்டபடியால் இன்று அதனை என்னவோ ஏதோவென்று திகைத்துப்போய்ப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். இந்த நூலானது அந்த அச்சங்களை எல்லாம் தகர்க்கும் ஒன்றாக இருக்கப் போகின்றது.



அட்டா, இதுவா விடயம்? இதைத்தானா இவ்வளவு நாளும் கவனியாது இருந்தேன்? என்றெல்லாம் உங்களையே நீங்கள் கேட்கப் போகின்றீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்களின் ஆரம்பப் புள்ளியின் இரகசியங்களை அறிந்து கொள்ளப் போகின்றோம். இது உனக்குத் தெரியாது, தேவையில்லாதது, பரம இரகசியம், துருவித் துருவிப் பார்க்கக்கூடாது எனக் கூறுவதற்கு இங்கே யாருமில்லை. தேவையானது எல்லாம் நியாயமான தேடல் மட்டுமே.

உண்மையைக் கண்டறியப் போகிறேன் என்ற உற்சாகம் இருந்தால் ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றும் வந்துவிடும்.

இன்னொரு விடயம், வளர்ந்து வருகின்ற அறிவியல் உலகில் ஏற்படுகின்ற மாற்றங்களை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையொன்று இப்போது இருக்கின்றது. அறிவியலில் தலைமுறை இடைவெளி என்ற ஒன்று இருக்கக் கூடாது. அப்படியிருந்தால் அது எங்களை புதிய தலைமுறையிடம் இருந்து பின்தள்ளி, இருதலைமுறைக்கும் இடையில் பெரும் இடைவெளியை உண்டாக்கிவிடும். இப்படியான நிலைமை மனித இனத்திற்குத் தக்கதான ஒன்றல்ல.

எடுத்த உடனேயே 'அந்த மூன்று நிமிடங்கள்' உள்ளே நாம் நுழைந்து விடப் போகின்றோம். அந்த மூன்று நிமிடங்களைப் புரிந்து கொள்வதற்கான தேவையான அடிப்படை விபரங்களை, இயற்பியலின் சில முடிவுகளை அவ்வவ்விடங்களில் எமக்கு விளங்கிக் கொள்ளும் வண்ணமாகத் தெளிவுபடுத்தியுள்ளேன். இயற்பியல்வாதிகள் தத்துவங்களையும், தர்க்க முறையிலான அணுகல்களையும், கணிதவரைவுகளையும், மாதிரி அமைப்புக்களையும், எடுகோள்களையும் கொண்டு தமது முடிவுகள் திருத்தமானவை எனக் காட்டுவார்கள். ஆனால், கணிதச் சிக்கல்களிலோ, தலை சுற்றுகிறதே எனக் கூறும் தர்க்க, தத்துவங்களிலோ நாங்கள் மாட்டிக் கொள்ளப் போவதில்லை. பெரும் தலையிடிகளின் பின்னராக விஞ்ஞானிகள் தந்த, ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களைக் கொண்டு எங்களது அறிவுக் கட்டிடத்தைக் கட்டப் போகின்றோம்.

இவற்றைவிட இன்னொரு விடயம், எங்கள் பிள்ளைகளின், பேரன்மாரின் அறிவியற் படிப்புக்களில் கூட எங்களது பங்களிப்புகளைத் துணிந்து செய்யலாம். எனது கட்டுரைகள், நூல்களின் ஊடாக அந்த மகிழ்ச்சியான அனுபவத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் எனக்களித்த உற்சாகத்தின் காரணமாகவே இதனைத் துணிந்து எழுதுகிறேன்.

இக்கட்டுரையை எழுத வேண்டும் என்ற ஆவல் எனக்கு 2007ஆம் ஆண்டிலேயே ஆரம்பமாகி விட்டது. 2006ம் ஆண்டில் வெளிவந்த எனது 'பிரபஞ்சத்தைப் பற்றிய வியப்பான செய்திகள்' என்ற நூலினைப் படித்தவர்கள் அந்தத் தைரியத்தைக் கொடுத்திருந்தார்கள். பேரண்டத்துள் முதல் முதலில் விண்மீன்கள் எவ்விதம் தோன்றின என்ற விபரத்தை அதில் எழுதியிருந்தேன். உலகின் பல பாகங்களிலும் இருந்து பல உறவுகள் அந்நூலின் கருத்துச் செறிவினையும் தமிழின் எளிமையினையும் பாராட்டி இருந்தார்கள். அதன் விளைவாக, பேரண்டத்தின் ஆரம்பத்தினைப் பற்றிய புதிருடன் இத்தொகுதி ஆரம்பமாகின்றது.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அந்த மூன்று நிமிடங்களை அலசப் போகின்ற எங்களின் பயணத்தின் பல விஞ்ஞானிகளின் அயராத உழைப்பினால் வெளிக் கொண்டு வரப்பட்ட உண்மைகளைப் பார்க்கப் போகின்றோம். இவ்வுண்மைகள் வெளிவருவதற்கு எவ்வளவு இன்னல்களை அவர்கள் அடைந்தார்கள் என்பதை இலகுவில் கூறிவிட முடியாது. எத்தனை சிக்கல்கள், எத்தனை போட்டிகள், காரசாரமான விவாதங்கள், சில சமயங்களில் திருட்டுக்கள் கூட நிகழ்ந்தன. மனமுடைந்து தம்முயிர்களைத் தாமே மாய்த்தவர்களும் உண்டு. ஆய்வுகளின் தாக்கங்களினாற் தம்மினிய உயிர்களைத் தொலைத்தவர்கள் பலர்.

ஒவ்வாதவர்களினால் பகிரங்கமாகவும், இரகசியமாகவும் கொலையுண்டவர்களின் பட்டியலையும் கூட இந்நாட்களில் காட்டுகின்றார்கள். தம் நிலை மறந்து பைத்தியங்களானவர்களும் இருந்திருக்கிறார்கள். "ஒன்றுமே வேண்டாம், உன் பாதங்களில் சரணடைகிறேன்" எனக் கூறி, ஆய்வுகளை விட்டு விட்டு ஆண்டவனிடம் ஓடியவர்களும் உண்டு.

ஆனாலும் ஒன்றுமேயில்லா நிலையில் இருந்து, இயற்கையின் உண்மைகளின் மேல் உண்மைகள் என அடுக்கப்பட்டு இவ்வளவு உயரிய நிலைக்கு அறிவியல்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

- கனி -
416.261.1348
ptons@hotmail.ca



MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL • TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# சர்க்கரை நோய் என்பது என்ன?

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**

உடலில் இன்சுலின் ஹார்மோனின் குறைவு ஏற்படுவதாலோ, இன்சுலின் செயல்பாட்டில் மந்தத் தன்மை உருவாவதாலோ இரத்தத்தில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கிறது. அதனால் ஏற்படும் நோய்த் தன்மையே சர்க்கரை நோய் என்கிறோம். சர்க்கரை நோயை பிரைமரி டயாபட்டீஸ் என்றும் செகண்டரி டயாபட்டீஸ் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

உலக அளவில் இப்போது பெருமளவு பணத்தைச் செலவிட்டு, அதிகப்படியான ஆராய்ச்சிகள் சர்க்கரை நோயைப் பற்றி நடந்து கொண்டிருக்கிறது. ஏன் என்றால் சர்க்கரை நோயால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை எல்லா நாடுகளிலும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

தனிப்பட்ட காரணங்கள் எதுவுமின்றி, குறிப்பிட்ட நோய்கள் எதுவுமின்றி நேரடியாக ஏற்படும் சர்க்கரை நோய் பிரைமரி டயபற்றீஸ். வேறு ஏதாவது நோய்த்தன்மைகளாலோ, பராம்பரியமாகவோ உருவாகுவதை செக்கண்டரி டயாபற்றீஸ் என்கிறோம்.

இப்போது அதிகமாக இருந்து வருவது பிரைமரி சிறுநீரகநோய் தான். இதனை சிகிச்சை முறையில் இரண்டாகப் பிரிக்கலாம். சிகிச்சையில் கட்டயமாக இன்சுலின் தேவைப்படுவதை 'Type 1' சர்க்கரை நோய் என்றும், ஊசி போடாமலே சிகிச்சை செய்து கட்டுப்படுத்தப்படுவதை 'Type 2' சர்க்கரை நோய் என்றும் குறிப்பிடுகிறோம்.

## Type1- சர்க்கரை நோய் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்

பொதுவாக குழந்தைகளிடமும், இளைஞர்களிடமும் இந்த நோய்ப் பிரிவு அதிகம் காணப்படுகிறது. மொத்தமுள்ள சர்க்கரை நோயாளிகளில் ஐந்து சதவீதம் பேர்வரை இந்த பிரிவுக்குள் வருகிறார்கள். குழந்தைகளிடம் இந்த நோய் அதிகமாகக் காணப்படுவதால் இதனை ஜீவனைல் சிறுநீரக-நோய் என்றும் குறிப்பிடுவார்கள். இன்சுலின் தேவைப்படும் இந்த நோயாளிகள், இன்சு-லின் கண்டுபிடிப்பதற்கு முன்பு சீக்கிரமாகவே இறந்து போகும் நிலை ஏற்பட்டிருந்தது. இப்போது இவர்களுக்கு இன்சுலின் செலுத்தி, நோயைக் கட்டுப்படுத்தி, இயல்பானவர்களைப்போல் இவர்களையும் வாழ வைக்க முடிகிறது. ஆனாலும் இவர்களுக்கு முழுமையான சிகிச்சை கொடுத்து நோயைக் கட்டுப்படுத்தாவிட்டால் நோயின் நெருக்கடிக்குள் இவர்கள் சிக்குவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும்.

இவர்களுக்கு உடல்மெலிந்து காணப்படும், அதிகதாகம், அதிகமாக சிறுநீர் வெளியேறுதல் போன்றவை இவர்களிடம் இருக்கும். இவர்களுக்கு இளம் வயதிலேயே இத்தகைய நோய் பாதிப்பு ஏற்படக் காரணம் என்ன என்பது பற்றி இப்போதும் ஆராய்ச்சிகள் நடந்தவண்ணம் இருக்கின்றன. இதற்கு இன்சுலின் ஊசி போடும் சிகிச்சை முறையே உள்ளது.



## Type2 - சர்க்கரை நோயைப்பற்றிய தகவல்கள்

பொதுவாக சர்க்கரை நோயாளிகளில் 90-95 சதவீதத்தினர் இந்த வகை சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்களாவே இருக்கிறார்கள். முன்பு 35 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே இந்த நோய் ஏற்பட்டது.

இப்போது 25-30 வயதிலே இந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள். 18-20 வயதுகளில் பாதிக்கப்படுகிறவர்களும் உண்டு. பாரம்பரியம், வாழ்க்கைமுறை, உணவுப் பழக்கம், உடற்பயிற்சி இல்லாமை, குண்டான உடல்வாகு போன்றவை இதற்கான காரணங்களாகும்.

அப்பாவிற்கும், அம்மாவிற்கும் சர்க்கரை நோய் இருந்தால், பிள்ளைகளுக்கு அந்த நோய் வரும் சூழ்நிலை 90-100 சதவீதம் இருக்கிறது. பெற்றோரில் ஒருவருக்கோ, நெருக்கமான உறவினர்களுக்கோ இருநதால் 75-80 சதவீதம் நோய் வரும் சூழ்நிலையும், பெற்றோரில் ஒருவருக்கு மட்டுமே இருந்தால் பிள்ளைகளுக்கு நோய் வரும் சூழ்நிலை 40-45 சதவீதம் இருக்கிறது.

## Type- 2 சர்க்கரை நோய்க்கு மிக முக்கியகாரணம் குண்டான உடல்.

குண்டான உடல் உள்ளவர்களுக்கு உடல் இயக்க செயல்பாடுகளுக்கு அதிகமானளவு இன்சுலின் தேவைப்படுகிறது. ஆனால் உடல் எடைக்குத் தக்கபடியான அளவு இன்சுலின் உற்பத்தி அதிகரிப்பதில்லை. கொழுப்பு நிறைந்த உடலுக்குள் இயங்கவும் இன்சுலினுக்கு முடியாமல் போவதால், அதன் செயல்பாட்டில் முடக்கம் ஏற்படுகிறது. அதனால் சர்க்கரை நோயின்தன்மை அதிகரிக்கும்.

சர்க்கரை நோயின் தன்மை நாடு முழுக்க அதிகரித்துக் கொண்டே போவதால் எல்லோரும் இந்த நோயிடம் மிக உஷாராக இருக்க வேண்டும். வாழ்க்கைமுறை, உணவுப்பழக்கம், உடற்பயிற்சி போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்த வேண்டும் மட்டுமன்றி அவ்வப்போது உடல் பரிசோதனைகளையும் செய்து வரவேண்டும்.

## 'சர்க்கரை நோய் எப்படி ஏற்படுகிறது?'


சர்வதேச மருத்துவ அரங்கில் எய்ட்ஸ், கிட்னி பெயிலியர், ஹார்ட் அட்டாக், கான்சர் நோய்களுக்கு அடுத்தபடியாக 'சைலண்ட் கில்லர்' என்று வர்ணிக்கப்படுவது 'சிறுநீரக-நோய்' என்றழைக்கப்படும் சர்க்கரை நோய். இது மனிதனின் உடல்நிலையில் நிரந்தரப் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது. சர்க்கரை நோயைக் கட்டுபடுத்தலாமே தவிர, முற்றிலுமாக குணப்படுத்த இயலாது என்பது மருத்துவ ரீதியலான உண்மை!

பொதுவாக மனிதனின் இரத்தத்தில் 80-120 மில்லிகிராம் என்கிற விகிதத்தில்தான் சர்க்கரையின் அளவு இருக்க வேண்டும். இது கூடுதலாகவோ, அல்லது குறைவாகவோ இருந்தால் சங்கடம்தான்! மனிதனின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 120 மில்லிகிராமுக்கும் அதிகமாக இருந்தால் அது 'High Sugar'. டாக்டர்கள் இதனை 'ஹைப-கிளை சீமியா' என்று அழைக்கிறார்கள். மனிதனின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 80 மில்லிகிராமுக்கும் குறைவாக்க காணப்பட்டால், அது 'ஹைபோகிளைசீமியா' என்கின்றனர்.

சாதாரண நிலையில் இருக்கும் சர்க்கரையை சிறுநீர் வழியே செல்ல சிறுநீரகம் அனுமதிப்பதில்லை. சிறுநீரகத்தின் பாதையில் உள்ள கேப்சியூல்கள் மற்றும் டியூப்ல்ஸ் ஆகிய பகுதிகள், மனிதனின் இரத்தத்தில் சர்க்கரையை நிமிடத்துக்கு 350 மி.கி வீதம் உறிஞ்சிக் கொள்கிறது. இதையும் தாண்டி அதிக அளவிலான சர்க்கரை சிறுநீரகப் பகுதியில் சேகரமாகும் போதுதான் சிறுநீரகத்தின் சர்க்கரை உறிஞ்சப்படும் தன்மை பாதிக்கப்படுகிறது.

தைரொய்ட், பிட்யூட்டரி, அட்ரீனல் போன்ற சுரப்பிகளின் சுரப்புத்தன்மை அதிகமாக இருந்தால், அது இரத்தத்தில் சர்க்கரையின் அளவை 500 மி.கி விகிதத்துக்கு எட்ட வைத்துவிடும். இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்க வகை செய்யும் இன்சு-லின் ஹோர்மோனின் சுரப்புத்தன்மை பாதிக்

(தொடர்ச்சி 40ஆம் பக்கம்...)






# கனடாவில் புதிய ‘ATN IBC‘ தமிழ்’ தொலைக்காட்சி அறிமுகம்!

கடந்த வெள்ளிக்கிழமை October 28th, 2016 அன்று இலண்டனை தலைமையகமாகக் கொண்டு Lebara நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டு ஐரோப்பாவில் இயங்கி வரும் IBC தமிழ் தொலைக்காட்சி, கனடாவில் பல்லாண்டுகளாக 50க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகளை தன்னகத்தே கொண்டு இயங்கிவரும் ATN தொலைக்காட்சி (Asian Television Network) நிறுவனத்துடன்




இணைந்து கனடாவில் தமது தொலைக்காட்சியை ‘ATN IBC‘ தமிழ்’ எனும் பெயரில் கனேடியத் தமிழ் சமூகத்துக்கு அறிமுகம் செய்யும் நிகழ்வு வெகுசிறப்பாக ATN கலையகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கனேடியத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஊடகங்கள், கலைஞர்கள், அமைப்புக்களைச் சேர்ந்த பலர் அழைக்கப்பட்டிருந்தனர். இத் தொலைக்காட்சியின் எதிர்காலத்திட்டங்கள் பற்றியும், கனேடியத் தமிழ் ஊடகங்கள், கலைஞர்கள், வணிகர்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் குறித்தும் ATN நிறுவனத்தின் தலைவர் திரு. கலாநிதி. சு.சந்திரசேகர், IBC தமிழ் நிறுவனத்தின் தலைவர் திரு. பாஸ்கரன் மற்றும் நிறைவேற்று இயக்குனர் திரு. நிராஜ் டேவிட் ஆகியோரினால் கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

## பெரிதாக...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அவரின் பதவி விலகலுக்கு காரணம் என்றும் சொல்லப்படுகின்றது. இந்தத் தருணத்தில் பிரதமர் ரணில் பிரசெல்ஸிலும், ஜனாதிபதி மைத்திரி இந்தியாவில் நடைபெற்ற பிரிக்ஸ் - பிம்ஸ்டெக் மாநாட்டிலும் இருந்தனர். பின்னர் 17ம் திகதி ஜனாதிபதி மைத்திரி நாடு திரும்பினார். பிரதமர் ரணில் பிரசெல்ஸிலிருந்து 21ம் திகதி நாடு திரும்பினார். இருவரும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தாலும் அது தொடாபான விபரங்கள் வெளிவரவில்லை. அதுமட்டுமன்றி என்ன நடக்குமோ என எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் எதுவும் நடக்கவில்லை.

பரபரப்பும் கொதிநிலையும் தணிந்துவிட்டன. இந்த முரண்பாட்டை வளரவிடாமல் தடுப்பதிலும், நிலைமையை சுமுகமான கட்டத்திற்கு கொண்டுவருவதிலும் ஆட்சிமாற்றத்திற்கு பின்னணியில் இருந்து உதவிய சர்வதேச தரப்புகளின் தலையீடுகளும் காரணம் என கூறப்படுகின்றது.

## அமெரிக்க...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆறு ஆண்டுகள். ஆனால் இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு தேர்தலிலும் (இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை) தெரிவு செய்யப்படுவர். எதிர்வரும் 2016 நொவெம்பர் 08இல் நடைபெற இருக்கும் தேர்தலில் 34 மேற்சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

தற்போதைய மேற்சபையில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 54 உறுப்பினர்களும் ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த 44 உறுப்பினர்களும், 2 சுயேட்சை உறுப்பினர்களும் உள்ளனர். மேற்சபையில் பெரும்பான்மையைப் பெற 51 ஆசனங்கள் வேண்டும். தற்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக ஜனநாயகக்கட்சியை சேர்ந்த ஒபாமா இருந்தாலும் அமெரிக்க நாடாளுமன்றத்திலும் (House of representatives) மற்றும் மேற்சபையிலும் (Senate) குடியரசுக்கட்சியே பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கிறது. இம்முறை நடைபெறும் தேர்தலில் இதை மாற்றியமைக்க ஜனநாயகக்கட்சியினர் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்கூறிய மூன்று நாடுதழுவிய தேர்தல்களை விட (ஜனாதிபதி, நாடாளுமன்றம், மேற்சபை) மேலும் பல மாநிலத்தேர்தல்கள் 2016 நொவெம்பர் 08இல் அமெரிக்காவில் நடைபெறுகின்றன. அவற்றில் 12 மாநில ஆளுனர்கள் (State Governor), நூற்றுக்கணக்கான மாநில மேற்சபை உறுப்பினர்கள், ஆயிரக்கணக்கான மாநில நாடாளுமன்ற




உறுப்பினர்கள், நீதிபதிகள், நகர முதல்வர்கள் மற்றும் County Sheriff இற்கான தேர்தல்களும் அடங்கும். இதைவிட பல மாநிலங்கள் பல்வேறு விடயங்களுக்கான பொதுசன வாக்கெடுப்புக்களையும் இத்தேர்தலுடன் சேர்த்து நடத்துகின்றன.

## இயற்கையின்..

14ஆம் பக்கத்தொடர்ச்சி

வளர்ந்திருப்பதை நாம் கண்கூடாக் காண்கின்றோம். இருப்பினும் சூழலைத் தன்வயப்படுத்தி அதிலே தன்னைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும் மனிதரின் அறிவியல் வளர்ச்சியினைக் கண்டு மனிதர்களே அச்சமடைவதும் உண்மை. அதனால் இயற்கையை இயற்கையாகவே இருக்க விடுங்கள் எனக் கூச்சலிடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.



இயற்கையின் ஆற்றல் இயல்பாய் வெளிப்படாது வலிந்த நிலையில் வெளிவருகையில் உண்டாகும் அனர்த்தங்களின் பயமே இதற்குக் காரணம் எனலாம்.

என்னதான் இருப்பினும் அதிசயம் எனக் கருதப்பட்ட விடயங்கள் மெதுமையாக அறியப்படுகையில் ‘பூ! இது தானா!’ என்கிற ஒருவித மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போன்ற சில விடயங்கள் ஏற்பட்டாலும் அறிவியல் வளர்ச்சியானது மனித இனத்திற்குப் பெரும் பலமாகத்தான் இருக்கின்றது. ஐந்தறிவு உயிரினங்களுக்குச் ‘சும்மா’ இருப்பது போதுமானதாக இருக்கலாம். ஆனால் சிறப்பு விலங்கான மனிதருக்கு அது பொருந்தாது என்றே கூறவேண்டும். அலசலும் தேடலும் நடந்து கொண்டேதான் இருக்க வேண்டும். அறிவு வளர வளர, மாயையால் இன்று உண்மையெனக் கருதப்படுவது கூட, நாளைய காரணிகளால் பொய்யாக்கப்படலாம். விஞ்ஞானம் என்பதற்குக் ‘காலத்தால் பொய்ப்பிக்கப்படக் கூடியது’ என்றொரு வரைவிலக்கணமும் உண்டல்லவா. அந்த வகையான முயற்சியின் பயனாக வந்தவற்றில் எமக்குத் தேவையானவற்றை இந்நூலிற் பார்க்கப் போகிறோம். உங்களை ஆச்சரியப்படுத்தப் போகின்றவற்றை முற்றாகவே பட்டியலிட்டுக் கூறாவிடினும் பலவிடயங்கள் இதிலுண்டு என்பதை மட்டும் இப்போது கூறி ஆரம்பிக்கிறேன். அதற்கு முன்னராக, நான் எங்கேயோ கேட்டதை, அடிக்கடி கூறுவதுண்டு.

“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”



# பாரதி கலைக்கோவிலில் இசைப்பிரியனின் இசைநிகழ்வு

"இசை" என்ற சொல்லுக்கு "இசைய வைப்பது" என்று பொருள். கேட்போரை இசைய வைக்கின்ற ஓர் அரிய சாதனம் இசை.

ஒழுங்கான, கட்டுப்படுத்தப்பட்ட இனிய ஒலியான இசையை இசைப்பிரியன் தனது கம்பீரமான குரல் வளத்தால் ஏற்றமுறச்செய்து இரசிகர்களை தம்பால் இசையவைத்த அற்புதத் திறன் கண்டோம் - ஆனந்தம் மிகக் கொண்டோம். விளம்பர அனுசரணை ஏதுமின்றி தனி நபராக இசை நிகழ்ச்சியை ஓர் இசைப் புயலாகவே வீச வைத்த இசைப்பிரியனின் அசைக்க முடியாத ஆர்வத்துக்குத் –துணிகரமான போக்கிற்கு "விளம்பரம்" மூலமாய் "பிரமாதம்" எனக் கூறுவதற்காக எடுத்தேன் என் குமிழ்முனைப் பேனாவை.



பாரதி கலைக்கோவிலில் பார்வையாளர் கூட்டத்தில் கடந்த இருபத்திமூன்றாம் திகதி இதமான குளிர் பரவிய மாலைப் பொழுதில் இரசிகர்கள் திரண்டனர். அவர்களில் கர்நாடக இசைப்பாடகர்கள், செவ்விய தாளவிசைக் கலைஞர்கள், சாஸ்திரீக நடன ஆசிரியர்கள் என்போரும் தென்பட்டனர். இசைப்பிரியனுக்குக் கிடைத்த அதி உயர் கௌரவம் அது. அவர்களை ஒட்டுமொத்தமாக ஒரு நிகழ்ச்சிக்கு வரவழைப்பது அசாத்தியமான காரியமே. நானோ இசைப்பிரியனை இதற்கு முன்னர் நேரில் சந்தித்ததில்லை. அன்புக் கட்டளையாக அவர் விடுத்த அழைப்பு, மனைவியுடன் நிகழ்ச்சிக்குச் செல்ல வைத்துவிட்டது.

சி. எம். ஆர்., ரி. வி. ஐ. கமல்பாரதி அறிவிப்புகளைச் செய்தார். அப்துல் ஹமீதின் சாயல் அவ்வப்போது புலப்பட்டது. அவரது நகைச்சுவை கலந்த அறிவிப்புகள் அரங்கில் குதூகலத்தை ஏற்படுத்தியது. இசைப்பிரியன் மொத்தமாக இருபத்தியொன்பது பாடல்களை வெகு அனாயாசமாக, அனுபவித்துப் பாடினார். அவற்றில் பக்திப் பாடல்கள், திரைப்படப் பாடல்கள், அவரது சொந்தப் பாடல்கள் அடங்கியிருந்தன. நினைவில் நிறைந்த திரைப்படப் பாடல்கள் பெரும்பாலும் கர்நாடக இசை தழுவியவையாக அமைந்திருந்தன. இசைப்பிரியன் செல்வி தங்கநாச்சியிடம் ஆரம்பத்தில் கர்நாடக சங்கீதம் பயின்றவர். ஜெயராஜனிடம் மிருதங்கம் கற்றவர். சமகாலக் குத்துப் பாடல்களையும் பாடி சபையோரை அசரவைத்தார் இசைப்பிரியன்.

மதிவாசனின் பாரதி கலைக்கோவில் மாணவ, மாணவியர் பின்னணி இசை வழங்கினர். அவர்களின் ஆற்றல் இசைப்பிரியனுக்கு நல்ல பக்கபலமாய் அமைந்தது. கீ போர்டில் யஸ்வினி, தப்லாவில் யாதவன், ட்றம்சில் பிரவீன் ஆகியோர் நன்றாக இசைத்தனர். அதேவேளையில் பாரதி கலைக்கோவில் மாணவிகளான மயூரதி, அபிராமி ஆகிய இருவரும் அவ்வப்போது இசைப் பிரியனுடன் சேர்ந்து பாடி சபையோரைக் கவர்ந்தனர். மாணவிகளே உங்களால் பாரதி கலைக்கோவிலுக்கு இன்னும்

வி.என். மதிஅழகன் ஒலிபரப்பாளர்

மகத்துவம் வந்து சேரும்.

திருநெல்வேலியில் பிறந்து புதுக்குடியிருப்பில் வாழ்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற பின்னர் புலம்பெயர்ந்த இசைப்பிரியன் தொழில் ரீதியில் தகவல், தொழில்நுட்ப பொறியியல் வல்லுனர். பிரான்சிலும், அமெரிக்காவிலும் இத்துறையில் உயர்கல்வி பெற்றவர். கனடாவில் தற்போது வாழும் இவர் அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெயின், ஜப்பான், சுவிற்சலாந்து, சிங்கப்பூர் ஆகிய பல்வேறு நாடுகளில் பணியாற்றியவர். இசைப்பிரியன் ஓர் ஊடகவியலாளரும் கூட. கனடாவில் முன்னர் வெளிவந்த 'இளந்தளிர்' என்ற பத்திரிகையின் பிரதம ஆசிரியராக விளங்கியவர். சிறுகதைகள், தொடர்நாவல்கள் எழுதியவர். கனடாவில் "ராகப்பிர வாகம்", பிரிட்டனின்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

Second Career
Planning for a New Career or Upgrading Your Skills?
Find Out:
♦ Which program best suits your skills?
♦ What government funding is available for you?
♦ Which careers have the best job opportunities?

❖ EENC is an award-winning service network that is connected to 100's of Training Institutions and Employers.
❖ We are NOT a Training Institution.
❖ Our services are free and you are under no obligation.
Join 100's Who Say They're Glad That They Called Us First
EENC.ca Employment and Education Network Canada Inc.
Scarborough Mirror 2016 readers' choice Awards WINNER
Scarborough Mirror 2016 readers' choice Awards DIAMOND
Nira (Mon to Fri 9AM to 5 PM)
(416)-224-5020 Ext: 201
தமிழில் விபரங்களிற்கு:
(416)-224-5020 Ext 205
Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:
BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin ♦Business Administration ♦ERP Information System Analysis ♦Banking and Financial Services ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Supply Chain & Logistics ♦Business Management ♦Business Analysis, Projects & Service Management ♦PMP ...
IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦Network Security Specialist ♦Web & Mobile Developer ♦CISCO ♦LINUX ♦Software Quality Assurance and Testing ♦ITIL ♦Datawarehousing & Business Intelligence ...
HEALTHCARE & Related
Medical Office Administration ♦Diagnostic Cardiovascular Sonography♦ ECG/Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker(PSW) ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant(ECA) ♦Medical Laboratory Technician ♦Physiotherapist Assistant and Occupational Therapist Assistan♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...
TRADES
HVAC Technician ♦Gas Technician-G3/G2 ♦Home Inspection ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechinacial / Engineering ♦Welding / Solar Energy Technician ...
ENGINEERING / DESIGN
Civil Engineering Design and Technology ♦CNC and MasterCAM Technology ♦Mechanical Engineering Design and Technology ♦Structural Engineering Design and Technology♦Electrical and Electronics Engineering Design & Technology ...
PHARMACEUTICAL
Pharmaceutical Manufacturing ♦Pharmaceutical Quality Control ♦Regulatory Affairs ♦Research & Development ♦Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology ♦Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research ...

# ஜெயலலிதா எப்படியிருக்கிறார்?

## நேர்காணல் – அதிமுக செய்தித் தொடர்பாளர் பண்ருட்டி ராமச்சந்திரன்

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த எம்.ஜி.ஆர். உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது சந்தித்தது போன்ற ஒரு நெருக்கடி நிலையை இன்று மீண்டும் சந்திக்கிறது அதிமுக. எம். ஜி. ஆருக்குப் பிறகு கட்சியை யார் வழிநடத்துவர்? வாரிசு என்று ஒருவரை உருவாக்காததாலும், எம். ஜி. ஆர். போன்ற பலமான இரண்டாம் நிலைத் தலைவர்கள் இல்லாததாலும், எம். ஜி. ஆருடன் அதன் ஆயுள் முடிந்துவிடும் என்று ஆரூடம் சொல்லப் பட்டது. அனைத்தையும் பொய்யாக்கி, எம். ஜி. ஆருக்குப் பிறகும் இதோ 30 ஆண்டுகள் கட்சியைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறார் ஜெயலலிதா. இந்த முப்பது ஆண்டுகளில் நடைபெற்ற ஏழு தமிழகச் சட்டமன்றத் தேர்தல்களில் நான்கில் அதிமுக வெற்றிபெற்றிருக்கிறது. இப்போது ஜெயலலிதா உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலுள்ள சூழ்நிலையில் மீண்டும் பழைய கேள்விகள், சந்தேகங்கள் வரிசைகட்டி வெளிவருகின்றன.

- சிவதாணு-

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு என்னதான் ஆச்சு? தமிழக அரசியலில், குறிப்பாக அ.தி.மு.க.வில் என்னதான் நடக்கிறது? என்று அதிமுக தொண்டர்களும் தமிழகமும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் பதைபதைப் போடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் மூத்த அரசியல்வாதியும், அ.தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளருமான பண்ருட்டி ராமச்சந்திரனை, ஒரு மாலை வேளையில் அவரது வீட்டில் சந்தித்தோம். நமது சந்தேகங்களைக் கேள்விகளாக முன்வைத்தோம்.

எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் முக்கிய பொறுப்பில் இருந்தவர்களில் இன்றும் அதிமுகவின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவராக இருப்பவர் நீங்கள் மட்டும் தான். அமெரிக்காவில் எம். ஜி. ஆர். சிகிச்சை பெற்றபோது, அவரது புகைப் படங்களையும் காணொளிகளையும் வெளியிட்டுத் தொண்டர்களின் பயம் போக்கினீர்கள். ஆனால், இன்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் ஜெயலலிதா பற்றி வெளியாகும் தகவல்கள் அனைத்தும் மர்மமாகவே உள்ளதே?

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது தமிழகத்தில் சட்டமன்றப் பொதுத்தேர்தலைச் சந்திக்கவேண்டிய சூழ்நிலை இருந்தது. அப்போது அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்ற சந்தேகத்தை எதிர்கட்சிகள் வதந்தியாய் பரப்பினார்கள். குறிப்பாகத் திமுக தலைவர் கருணாநிதி அன்று என்னவெல்லாம் பேசினார் என்பது அனைவருக்கும் தெரியும். எனவே, வாக்களிக்க இருக்கும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய சூழ்நிலை இருந்ததால் எம்.ஜி.ஆர். உயிருடன் இருக்கிறார் என்பதை நிரூபிக்கப் புகைப்படமும், வீடியோக் காட்சிகளும் எடுத்து வெளியிடப்பட்டன. ஆனால், இப்போது அப்படியொரு நிலை இல்லை. எனவே, இப்போது புகைப்படமோ வீடியோவோ வெளியிட வேண்டிய அவசியம் இல்லை. ஊடகங்களும், சமூக வலைத் தளங்களும் தான் தேவையில்லாமல் இதனை ஒரு பிரச்சினையாக மாற்றுகின்றன. அம்மாவுக்குப் பிரதான பிரச்சினை தொற்றுநோய்தான். ஆகவே, அவரை மற்றவர்கள் சந்திப்பதோ புகைப்படம் எடுப்பதோ கூடாது, முடியாது. மருத்துவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். முதல்வரை நான் பார்க்கச் சென்றபோதே தொற்று ஏற்பட்டுவிடும் என்பதற்காக முகத்தில் மாஸ்க் கட்டிக்கொள்ள அறிவுறுத்தியதோடு, துணியையும் மாற்றிக் கொள்ளச் சொன்னார்கள் மருத்துவர்கள். போய் பார்க்கிறேன் என்று சொல்லி வம்பு பண்ணாமல் இருப்பதே நாம



முதல்வருக்குச் செய்யக்கூடிய பெரிய உதவி என்றுதான் அப்போது நினைத்தேன். இந்நிலையில் எம்.ஜி.ஆருக்குச் செய்ததைப் போலவே இப்போதும் கருணாநிதி இதை ஒரு பிரச்சனையாகப் பெரிதுபடுத்துகிறார். இது அரசியல் நாகரிகம் அல்ல.

(தொடர்ச்சி 36ஆம் பக்கம்...)

JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- Mixers
- Window Assemblers.
- Forklift Opetators.
- CNC Machine set-up/ Operators.
- Packagers & Assembly line Workers.
- Welders MIG & TIG.
- Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@amail.com

STAFF MASTER INC.

# வீட்டைத் தெரிவு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

**எலெக்றிக்கல்** (Electrical) - என்ன உலோ கத்தினால் எலெக்றிக்கல் வேலை செய்யப் பட்டுள்ளது. (அதாவது அலுமினியத்தாலா அல்லது செப்பு (Copper). செப்பு உலோ கத்தால் எலெக்றிக்கல் தொடர்பு கொடுத் திருப்பதே சிறந்தது. மற்றும் வீட்டில் எவ்வ ளவு 60 amp. அல்லது 100 amp. இணை ப்பா அல்லது அதைவிட வித்தியாசமாக இருக்கின்றதா என்பதையும் கவனிக்க வேண்டும். இப்போதைய வீடுகளில் 100 amp. அனேகமாகக் காணப்படுகிறது.

**தண்ணீர் பாய்தல்** (Plumping) Plumping என்பது வீட்டிற்குள் தண்ணீர் வருவதும் மற்றும் கழிவுத் தண்ணீர் வெளியே போவதற்குமான அமைப்பு. ஓரளவு புதிய வீடுகளில் பிளாஸ்ரிக் பைப்புக்களினாலும் (PVC) கொப்பர் (Copper) பைப்புக்களினாலும் அமைக்கப்பட்டிருக்கும். முக்கியமாக வீட்டில் Plumping, பிரச்சினைகள் வரக் கூடிய இடங்கள் குளியலறை மற்றும் சமையல் பகுதி. ஏற்கனவே வீட்டில் இதனால் பாதிப்புக்கள் ஏற்பட்ட தடங்கள் இருக்கின்றதா என்பதனைக் கவனிக்கவும்.

**வெப்பமும் & குளிரும்** (Heating & Cooling) வீட்டின் உட்புறத்தை சூடாக்குவதும், குளிராக்குவதும். இது வீட்டில் முக்கியமாக கவனிக்க வேண்டியதாகும். வீட்டை சூடாக்கும் உபகரணம் /சாதனம் (Furnace) அதனுடன் சேர்ந்த மற்றைய பகுதிகளும், இதிலுள்ள குறைபாட்டை எமது கண்ணால் கண்டுபிடிப்பது கஸ்டமான விடயமாகும். எனவே வீடு பரிசோதிப்பவரைக் (Home Inspector) கொண்டு பரிசோதிப்பது நல்லது. இதே மாதிரித்தான் குளிரூட்டும் சாதனம் பரிசோதிப்பது நல்லது.

**நிலப்படுக்கை** (Flooring) வீட்டிற்குள் உள்ள நில அமைப்பு. வீட்டிற்குள் நடந்து செல்லும்போது ஏற்படும் சத்தம். இது வீடு கட்டும்போது நிலத்தின் மரம் / பலகைகளிற்கு போதியளவு கவனம் செலுத்தவில்லை. அடித்த ஆணிகள் (Screws) போதாது என்பதனை அல்லது வேறுவிதமான குறைபாட்டை தெரிவிக்கும். நடக்கும் போது சத்தம் ஏற்பட்டால் திருத்துவது நல்லது.

**ஜன்னல், சாளரம்** - எப்படியான ஜன்னல்கள் வீட்டில் உள்ளது. அதாவது மரத்திலால் ஆனா ஜன்னலா அல்லது தேமல் (Thermal window) பிளாஸ்ரிகாலான ஜன்னலா உள்ளது. பிளாஸ்ரிக் (Thermal) ஜன்னல் வீட்டில் இருப்பின் ஒருபோதும் மாற்றத் தேவையில்லை. சாதாரணமான பராமரிப்பு போதுமானது. மரத்தினாலான ஜன்னல் களை குறிப்பிட்ட காலத்தில் மாற்றவேண்டி ஏற்படும்.

**குளியல் அறைகளும் & சமையல் அறை யும்** - கவனமாக அவதானிக்க வேண்டும். இந்த இரண்டையும் கொண்டு வீட்டை எப்படி வீட்டுக்காரர்கள் பராமரித்துள்ளார்கள் என்பதை ஊகிக்கலாம். தண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்கிறதா அல்லது குளியல் அறையின் கீழ் இருக்கும் பகுதியில் (தளத்தில்) தண்ணீர் கசிந்த அறிகுறிகள் இருக்கின்றதா என்பதனையும் அவதானிக்க வேண்டும். பொதுவாக இந்த இரு பகுதியும் முக்கியமானவை.

**வீட்டின் அடித்தளப்பகுதி** (Basement) - நிலக்கீழ்ப்பகுதிப் போகும்போது ஏதாவது வித்தியாசமான மணம் வருமாயின் அதன் கருத்து, ஒன்றில் தண்ணீர் அத்திவாரச் சுவரால் உள்ளே வந்திருக்கலாம் அல்லது வீட்டைச் சூடாக்கும் உபகரணத்தில் ஏதாவது கசிவு (Leak) இருக்கலாம். கீழ்ப்பகுதி சுவரிற்கு அண்மையில் தண்ணீர் கசிவுகள் இருந்தால் அல்லது இருந்திருப்பின் நிலப் படுக்கையில் (Carpet) கறை இருப்பதை அவதானிக்கலாம். மேலும், வீடு கீழே இறங்கியுள்ளதா என்பதை வீட்டில் கதவுகளை பூட்டித் திறக்கும் போது அவதானிக்கலாம். எதுவித இறுக்கமும், சத்தமும் இல்லாமல் இலகுவாகப் பூட்டித் திறந்தால் வீடு கட்டப் பட்ட காலத்திலிருந்து நிலத்திற்குள் சரிந்து இறங்கவில்லை என்பது உறுதியாகும். உங்களிற்கு வீடு நன்றாக பிடித்துக் கொண்டால் வீடு பரிசோதிக்கும் நிபுணரைக் (Home Inspector) கொண்டு பரிசோதிப்பது நல்லது. நாம் எவ்வளவு கவனமாக, வீட்டை


## கொக்குவில் இந்துக்கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா

## KOKUVIL NIGHT - 2016

காலம்: Saturday, November 19, 2016
நேரம்: 6:30 pm
இடம்: J & J Swagat Banquet Hall
415 Hood Road, Unit 22,
Markham, ON L3R 3W2
*Admission:* Adult ***$30.00*** (for friends only)

இவ்வைபவத்தில் கொ.இ.கல்லூரி முன்னைநாள் மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்புகளுக்கு: *416.616.4386 / 416.301.1733*
*416.291.9956*



## JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

**JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH**

- General Labourers in Bakeries, Laundries & Other Factories
- Window Assemblers
- Forklift Operators & Warehouse Workers
- CNC Machine set-up/Operators
- Packagers & Assembly Line Workers
- Welders MIG & TIG

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN CARD & PHOTO ID AND TALK TO OUR SRI LANKAN REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

ABLE PLUS PERSONNEL INC
2300 Finch Ave. West, Unit #46
Toronto, ON M9M 2Y3
(416) 742-7474

ABLE PLUS
PERSONNEL INC.

# பாரதி கலைக்கோயில்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி



லண்டன் மாநகரில் "அகரம்" என்பவற்றில் ஒலிபரப்பாளராகப் பணி யாற்றியவர். இசைப்புயல் எனப் பெயரிடப்பட்ட இசைத்தட்டில் ஐந்து பிரபல திரைப்பட பின் னணிப் பாடகிகளுடன் சேர்ந்து இவர் பாடிய பாடல்கள் பதிவாகியுள் ளன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தேசிய சேவை, வர்த்தக சேவை என்ப வற்றை 70 களின் ஆரம்பத்தில் இருந்து கேட்டு வந்த நேயர்களுக்கு ஈழத்துப் பாடல்கள் நிகழ்ச்சியில் அடிக் கடி இடம் பெற்ற பாடல் ஒன்றை நினைவு படுத்துகிறேன். கே. ஆர். கணேஷ் பாடுவார் "முகத்தைப் பார்த்துக் குண த்தை அறியும் அறிவை இறைவன் கொடுக்கவில்லை" அந்த கணேஷைக் குருவாக வரித்து இசையுலகில் பிரவே சித்தவர் இந்த இசைப்பிரியன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மூலம் மிகப் பிரபல மாகிய மற்றுமொரு பாடல் "உனக்குத் தெரியுமா? நான் உன்னை அழைப்பது" பாடியவர் கோணேஷ். அவர் பிரதம அதிதியாகப் பங்குபற்றி உரையாற்றி னார். மதிவாசன் அவரைத் தமக்கே உரித்தான பாங்கில் அறி-முகப்படுத்தி வைத்தார்.

இசைப்பிரியன் தனியாளாக மேடையில் பாடியமை இதுதான் முதற் தடவைய ல்ல. இவர் அமெரிக்கா உட்பட பல நாடுகளில் இரசியர்களைக் கடந்த இர ண்டு தசாப்த காலத்துக்கும் மேலாக மகிழ்வித்து வருபவர். இசைப்பிரியனுக்கு இனிமையான, கவர்ச்சியான குரல் உண்டு. தீர்க்கமான சுருதி, சுர, இராக, தாள ஞானம் தெரிந்திருக்கிறது. அழுத்த மான சாரீரம் - நல்ல கற்பனை இசை ஞானம் அதுமட்டுமல்ல – ஆரம்பத்திலி ருந்து நிகழ்ச்சி முடிவுவரை அவரது குர லின் வன்மை தொய்யாமல் இருப்ப தைக் கண்டோம். களைப்படையாமல் பாடினார். அமைதியாகவும், சிரித்தமுகத் தோடும் பாடினார். இடையிடையே பேச வும் செய்தார். அங்க அசைவுகளால் பாடல்களுக்கு மெருகுமூட்டினார்.

இசைப்பிரியனே!
நீ தென்னாட்டுக் கலைஞன் அல்ல பன் னாட்டில் தடம் பதித்த என் உள்நாட்டுக் கலைஞன். மென்மேலும் மெருகு பெறட்






# குற்றவாளிகள்...

8ஆம் பக்கத்தொடர்ச்சி

அந்த சம்பவத்தை உடனடியாக அறி விக்காமை அந்த அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட தவறு என்றும், அது தெளிவான விதி மீறல் செயற்பாடு என் றும் தெரிவித்துள்ளார். அந்த மாணவர் கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவா கும் வரையிலான காலத்தில் பெற்றோர் பட்ட கஷ்டங்களையும், இரண்டு உயிர் களின் பெறுமதியையும் நினைக்கும் போது வருத்தமளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.




இதேவேளை, சுன்னாகம் பகுதியில் இரு பொலிஸ் அதிகாரிகள் மீது மேற் கொள்ளப்பட்ட வாள்வெட்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த இரண்டு புலனாய்வு அதிகாரிகளும் சீருடையில் இருக்காத காரணத்தினால், அவர்கள் பொலிஸ் அதிகாரிகள் என் பது அறியாமலேயே அந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப் பிட்டுள்ளார். பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் நியா யமானவையாகவும், குழப்பங்களைத் தவிர்க்கும் வகையிலும் கூறப்பட்டவை யாகவே கருதலாம். ஆனாலும், தவறு செய்த பொலிஸார் தொடர்பில் சரியான திசையில் விசாரணைகளை மேற்கொ ண்டறா அவர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பதும், இவ்வா றான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில் பொலிஸாருக்குக் கட்டளை விடுப்பதும் அவசியமானது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட பயிற்சிகள் வழங்கப்பட்ட பொலி ஸார் கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்த அடுத்தடுத்த நாளிலேயே மோசமானதொரு, விதிமு றைக்கு அப்பாற்பட்ட நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளமை பொதுமக் களுக்கு அவநம்பிக்கையினையே ஏற்ப டுத்தியுள்ளது.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட பல்கலை க்கழக மாணவர்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மகஜர்களை அனுப்பியுள் ளனர். அதற்குச் சரியான பதில் வரும் வரைப் பல்கலைக்கழகப் பீடங்கள் இயங்காது எனவும் அவர்கள் அறிவித்து ள்ளனர். இந்நிலையில் நாட்டின் ஜனாதி பதியும், பிரதமரும் இதற்குப் பதிலளிப் பதுடன், குற்றவாளிகள் என்று சந்தேகிக் கப்படும் பொலிஸார் ஐவர் கைது செய் யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்ற போதும் அவர்கள் மீது சட்டப்படி நடவ டிக்கை எடுக்கவும் உரிய தரப்பினருக்கு உத்தரவிட வேண்டும்.

ஒப்பீட்டளவில் கடந்த காலங்களை விட வும், ஒரு ஜனநாயகச் சூழல் துளிர்விட் டுள்ள நிலையில் அதனை எந்தவொரு தரப்பும் சீர்குலைக்க இடமளிக்கக் கூடாது.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

ஓம் முருகா

# கனடா ஸ்ரீ சண்முகநாதசுவாமி கோவில்

## Canada Sri Shanmuganatha Swamy Temple

# கந்த சஷ்டிப் பெருவிழா

**31-10-2016** (திங்கட்கிழமை) **தொடக்கம்**

**05-11-2016** (சனிக்கிழமை ) **வரை**




சண்முகப்பெருமான் அடியார்களே !

நிகழும் துர்முகி ஆண்டு ஐப்பசி திங்கள் 15ம் திகதி தொடக்கம்(31-10-2016) 20ம் திகதி (05-11-2016) வரை கந்த சஷ்டித் திருவிழா பகலும் இரவும் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது! நாள் தோறும் காலை 108 கலச சங்காபிஷேகமும் மாலை ஸ்நபன அபிஷேகத்தினைத் தொடர்ந்து சண்முகார்ச்சனையும் நடைபெற்று சண்முகப்பெருமான மின்சார விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்ட அழகிய தங்க ரதத்தில் வீதிவலம் வந்து யாக தரிசனமும் இடம் பெறும்.

05-11-2016 சனிக்கிழமை மாலை 7:00 மணியளவில் சூரசங்காரம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மகா பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று விஷேட பூஜைகளோடு சண்முகப்பெருமான் உள்வீதி வலம் வந்து யாக தரிசனம் நடைபெற்று பிரசாதம் வழங்கப்படும்.

06-11-2016 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4:00 மணிமுதல் விஷேட பூஜைகள் நடைபெற்று, பிரதான யாக கும்ப அபிஷேகமும், பாறணை தீர்த்தத்தினையும் தொடர்ந்து பாறணை பிரசாதம் வழங்கப்படும். அன்று மாலை தெய்வயானை அம்பாள் திருக்கல்யாணம் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

இந்த கந்த சஷ்டி விரதகாலத்திலே ஆலயதிற்கு வருகை தந்து சண்முகப்பெருமானை வணங்கி வேண்டி, அவரின் திருவருள் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வேண்டுகிறோம்!

**விஸ்வரூப தரிசனம்**
**03-11-2016**
வியாழக்கிழமை
மாலை 7:30 மணி

**வேல்வாங்கும் திருவிழா**
**04-11-2016**
வெள்ளிக்கிழமை
மாலை 7:30 மணி

**பாறனைப்பூஜை**
**06-11-2016**
ஞாயிற்றுக்கிழமை
அதிகாலை 4:00 மணி



**சூரன்போர்**
**05-11-2016**
சனிக்கிழமை
மாலை 7:00 மணி

**திருக்கல்யாணம்**
**06-11-2016**
ஞாயிற்றுக்கிழமை
மாலை 7:00 மணி



திருவிழாக் காலங்களில் அபிஷேகம், கற்பூரச்சட்டி [illegible] செய்யவும்.
திருவிழாக் காலங்களில் நண்பகல் அ[illegible] [illegible]
விரும்புவோர் ஆலய [illegible] தொடர்பு கொள்ளவும்.

**அனைவரும் வருக! ஆறுமுகன் அருள் பெறுக!**

சண்முக சேவையில்,
சண்முகப் பித்தன்
(ஆலய தர்மகர்த்தா)

**33 Melford Drive, Unit 8, Scarborough, ON M1B 2G6**

**416-613-1883**

www.omshanmuga.org

https://www.facebook.com/shanmuganathaswamy.hindutemple




SELENE
METROGATE
Another project by TRIDEL.....
Last and Final Phase at
METROGATE Community.
Don't miss the last chance...
Completion: SPRING 2020
Kennedy and HWY 401
TRIDEL®
BUILT FOR LIFE
416-321-6969
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage.*
5215 Finch Ave. East. Unit #203
Toronto M1S 0C2
*Independently Owned & Operated


Garesa's Fashion
CLOSING SALE
3341 Markham Rd, Unit B-115, Scarborough, ON M1X
STARTING FROM DECEMBER 1 - 31 , 2016
Everything Must Go!
- Pattu Silk Sarees
- Cotton Sarees
- Emposs Work Saree
- Tissue Saree
- Georgette work
- Lanka suit
- Girls Cotton Salwar
- Girls Net Salwar
- Ladies Cotton Salwar
- Ladies Net Salwar
- Necklace
- Earrings
- Pendan
All Your Parties
Pattu/Fancy/ Cotton Saree From ....... $ 45.00
Cotton /Net Salwar From ....................$ 35.00
Kids Salwar From ...................................$ 35.00
Lanka Suites From ................................ $ 99.00
Necklace From ....................................... $ 10.00
Bangles Sets From ................................ $ 10.00
Printed in Apex : 416-297-0707
WE ARE SPECIALIZE IN CUSTOM MAKING NEW ARRIVAL BRIDAL LANKAS, GROOM SALWARS AND ALL KIND OF PARTY WEAR DRESSES FOR THE WHOLE FAMILY.
(WE COME TO YOUR DOOR TO HELP YOU TO ARRANGE YOUR ALL OCCATION ACCORDING TO YOUR BUDGET)
BY APPOINTMENT ONLY
Tel: 416.528.1772

Forest Hill
REAL ESTATE INC • BROKERAGE
F.H.



23 MILT STOREY LANE Whitchurch, Stouffville.

European Inspired Unit Minto Townhome Brand New Modern And Stylish 9 Feet Ceiling On Main Engineering. Floor In Open Concept Living And Dining, Walk Out Terrace From The Kitchen As More Windows, Bright Interior, Eat In Kitchen, Massive Outdoor Patio, Practice Yoga In The Patio, With A Double Garage Drive Way

3 Bed Rooms, Three Story Town House,
Asking Price: $709,000



Sam Manian (M.Sc., CA)
Sales Rep. ( Residential & Commercial)
Call/Text: 416-918-9848

Opening Soon
Shirdi Sai School of Canada

We are accepting registration ( Kindergarten to Grade 5) for this brand new school opening soon in scarborough.
To register your interest please go to:
http://shirdisaischoolofcanada.com/

SHIRDI SAI SCHOOL
HONESTY COMPASSION PEACE LOVE INTEGRITY
CANADA

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
படிக்க கொஞ்சம் நேரம் ஒதுக்குங்க கைநிறைய சம்பாதிங்க




JOB READY PROGRAMS
PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
Immediate Job Opportunities
ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty
Earn good salary
Co-op Available
COMPUTERIZED ACCOUNTING
26 Weeks
FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000 or more

PART TIME COURSES
Windows,Word,Excel,Power Point,
Access,QuickBooks,Sage50 Accounting (Simply)
& Accpac 2012
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Placement Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

416-291-5155 / 416 451 6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# ஆறுமுகனின் வீறுமிக்க விரதம் கந்தஷஷ்டி

ஆலம் பிடித்து எமபாசம் சுழற்றி
தொடர்ந்து வரும்
காலன் தனக்கு ஒருகாலும் அஞ்சேன்
கடல் மீது எழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன்
ஆறுமுகன்
வேலும் திருக்கையும் உண்டே நமக்கு
ஒரு மெய் துணையே.



கலியுகவரதனாம் கந்தப் பெருமானை நினைந்து அநுட்டிக்கப்படும் விரதங்களில் மிகவும் சிறந்தது கந்த ஷஷ்டி விரதமாகும். இந்துக்கள் இவ்விரதத்தை மிகவும் புனிதமாகவும் பக்தி சிரத்தையுடனும் அநுட்டித்து வருகின்றார்கள். இவ்விரதம் ஐப்பசி மாத தீபாவலி அமாவாசையை அடுத்து வளர்பிறை பிரதமை முதல் ஷஷ்டி ஈறாகவுள்ள ஆறு நாட்கள் அநுட்டிக்கப்படுகின்றது. இது மிகவும் கஷ்டமான விரதம். ஆறு ஆண்டுகள் தொடர்ச்சியாக அநுட்டித்தால் உரிய பலன் கிடைக்கின்றது. ஷஷ்டி அன்றுதான் முருகப் பெருமான் சூரனை சங்காரம் செய்தார்.

மூவிரண்டு அதாவது ஆறு எண்ணிற்கும் அழகன் முருகனுக்கும் அதிக தொடர்புண்டு. அவனது முகங்கள் ஆறு. அவன் ஆறுமுகன். அவனது வீடுகள் ஆறு. ஆறுபடை வீட்டிற்கு அதிபன். அவை படை வீடுகள் எனப்படும். அவனது மந்திரம் 'சரவணபவ' என்று ஆறெழுத்து மந்திரம். அவனது விரதம் கந்தஷஷ்டி. ஆறு நாட்களைக் கொண்டது. ஷஷ்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்பர். இது கந்தனின் வீறு மிக்க விரதமாகும். எனவே மாறுபாடின்றி ஆறுமுகனை அனுதினமும் ஆராதனை செய்தால் எமக்கு தேறுதல் அளித்து எதிரிகளை கூறு செய்து காப்பாற்றுவான்.

கந்தஷஷ்டியில் ஆறு நாட்களும் விரதம் இருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் விடியற்காலை நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்து நீராடிய பின் பூரண கும்பம் வைத்து குங்கும அட்சதையிட்டு முருகனை அதில் ஆவாகணம் செய்து மலர் தூவி தூப தீபம் காட்டி அர்ச்சித்து வழிபட வேண்டும். கந்தஷஷ்டி கவசம், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, கந்தரந்தாதி, வேல் விருத்தம், சேவல் விருத்தம் முதலியவற்றை பாராயணம் செய்ய வேண்டும். ஏழாம் நாட் காலை பாரணை செய்ய வேண்டும்.

தெய்வ நம்பிக்கை, உயர்ந்த ஒழுக்க நெறியில் செல்ல வேண்டும் என்ற ஆர்வம், கட்டுப்பாடான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற துடிப்பு, நல்ல ஆரோக்கியம் இவை எல்லாம் ஏற்படுவதற்கு விரதங்கள் பெரிதும் உதவுகின்றன. 'காப்பது விரதம்' என்பதனால் அனுட்டானங்கள், பூசைகள், விரதங்கள் நம்மை நல்லவர்களாக வாழ வழி சமைக்கின்றன.

சண்முகக் கடவுள் போற்றி
சரவணத் துதித்தாய் போற்றி
கண்மணி முருகா போற்றி
கார்த்திகை பாலா போற்றி
தண்மலர் கடம்பா மாலை
தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி
வேலவா போற்றி! போற்றி!



நா. க. சிவராமலிங்கம்


YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# வாழ்க்கைப் பயணங்கள் - 28

## தொடர்கதை..........

"ஹலோ அப்பா எப்படியிருக்கிறீர்கள்" என்றாள் அமலா.

"நாங்கள் சுகமாய் இருக்கிறோம் அமலா. நீ எப்படி இருக்கிறாய்." என்றார் அமலாவின் தந்தையார் நடா.

"அப்பா அம்மா நிக்கிறாவா கிட்ட" என்றாள் அமலா.

"ஓம் பிள்ளை கொடுக்கிறன் நீ கதை" என்று அவர் சொல்ல அமலா "இல்லை அப்பா ஸ்பீக்கரில் போடுங்கள். நான் சொல்வதை இருவரும் கேளுங்கள்" என்று சொன்னாள் அமலா.

"சரி பிள்ளை ஸ்பீக்கரில் தான் போட்டிருக்கிறோம் சொல்லு பிள்ளை ஏதும் பிரச்சினையா" என்றார் நடா.

(4Brm, 2Bath) Brand new, 1 Parking space .Right On 401, Go Transit, Ttc, Place Of Worship, Steps to No frills, Close to shoppers, banks, park, restaurants. **[Asking $1800/m]**

*Scarborough – **Steeles / Stains – Full House**
(3Brm, 3 Bath) Backing Onto Ravine, Double Door Entry, Wood Floors, Interlocked Driveway, Access To Garage through home, Main Floor Laundry. Close To Shopping, Banks, Schools, Golf Course. Steps To Ttc.. **[Asking $1900/m]**

*Scarborough – **Kennedy / Sheppard – Condo**
Large Kitchen With Breakfast Nook, Separate Dining Room, Bright East Facing Solarium, Delux Rec Centre, Indvl Meter For Gas & Hydro. Gate & Building Security, Close To Ttc, Schools, Shopping, 401. **[Asking $1900/m]**

*Scarborough* – **Morningside / Manse Road – Full House**
(4Br,4Bath) Brand new house, Steps to TTC, Park. Close to Churches, Library, schools, restaurants, Banks, shopping **[Asking $2300/m]**

*Ajax – **Westney / Delaney – Townhouse**
(3Brm, 2Bath) Fully upgraded, open concept kitchen & living room Close To Elementary + Secondary Schools, 401,Shops & Restaurants.Short Walk To Public Transit, Parks with bike & walking trail **[Asking $1900/m]**

*Ajax – **Kingston / Hardwood – Full House**
(3Brm, 3Bath) Executive Home Fully Upgraded, Freshly painted, Close To Go Train, Hwy 401, 407 Extension Super Store, Costco, Banks, Restaurants & Much More. **[Asking $1825/m]**

*Oshawa – **Ritson/Wentworth- Main Floor**
(3 Brm, 1 Bath) Well Maintained, Spacious, Laminate floor Throughout, Close To Shopping, Hwy 401, Bus Stop,& Restaurants.**[Asking $1500/m]**

*Oshawa – **Adelaide / French – Main Floor**
( 3Brm, 1Bath) Open concept eat in kitchen with walk out to the deck. Close to Costco, Shopping & Transit **[Asking $1800/m]**

*Newmarket – **Mullock / Yonge – Basement**
Open concept, Spacious, Close To High Rank Elementary School & High School. Minutes To Mall, Bus Stop, Park. Short Term Lease Also Available (6 Months And Up). **[Asking $2900/m]**

*Brampton- **Countryside /Goreway – Main Floor**
( 4Brm + 3Bath) Brand new, Close to TTC, Schools, church, Shopping, & Restaurants **[Asking $2600/m]**

watsonpm1989@gmail.com

**SPECIALISING IN MANAGING RESIDENTIAL PROPERTIES**

**Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Vathsan: 416-417-8432**

# ரஜினியுடன் நடிக்க வேண்டும்!

## நேர்காணல் - நடிகை கீர்த்திசுரேஷ்

அறிமுகமான கொஞ்ச நாட்களிலேயே தமிழ் இளைஞர்கள் மனதில் கெட்டியாக இடம் பிடித்துவிட்டார் கீர்த்தி சுரேஷ். எண்பதுகளில் தமிழ் திரைப்பட ரசிகர்களின் உள்ளம் கவர்ந்த நடிகை மேனகாவின் மகள். வலது தாடை மச்சம், முத்துப் பற்கள் புன்னகை அழகுக்கு அழகு சேர்க்கிறது. சிவகார்த்திகேயனுடன் இரண்டாவது முறையாக இணைந்த 'ரெமோ' வெற்றி, 'பைரவா' படத்தில் விஜய் ஜோடி என்று சந்தோசத்தில் திளைத்துக் கொண்டிருந்த கீர்த்தியைச் சந்தித்தோம்.

'ரஜினி முருகன்', இப்போது 'ரெமோ' – சிவகார்த்திகேயன் – கீர்த்தி ஜோடிதான் இப்போது தமிழ் சினிமாவின் சக்ஸஸ் ஜோடி போலிருக்கிறதே?

(சிரிக்கிறார்) நன்றி. சிவாவுடன் எத்தனை தடவை நடித்தாலும் அலுக்காது. ரொம்ப மகிழ்ச்சியான மனிதர். அவர் படப்பிடிப்பு தளத்துக்கு வந்துவிட்டால் நகைச்சுவையும் கலகலப்புமாக நேரம் போவதே தெரியாது. அதேசமயம் நடிப்புக்கு தன்னை ஒப்புக்கொடுப்பதில் தீவிரமான ஆள். அவருடைய இன்றைய உயர்வுக்குத் திறமையும் தொழில் பக்தியும்தான் காரணம். 'ரெமோ' படத்தில் அவரது பெண் வேடம் பார்த்து நடிக்கும் போதே எனக்கு சிரிப்பு வந்துவிட்டது. அந்தப் பாத்திரத்துக்காக, சில விடயங்களில்



- சிவதாணு -

பெண்களின் முகபாவனை, உடல்மொழி எப்படி இருக்குமென்று அவருக்குச் சின்ன சின்ன ஆலோசனைகள் கொடுத்திருக்கிறேன். எனக்கும் அவருக்குமான கெமிஸ்ட்ரி சக்சஸ் ஆவதில் உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நீங்கள் நடிகையான கதை?

அப்பா சுரேஷ்குமார் திரைப்படத் தயாரிப்பாளர். அம்மா மேனகா நடிகை. எனவே, இயல்பாகவே எனக்குள்ளும் திரைத்துறை ரத்தம்தான் ஓடிக் கொண்டிருந்தது. இந்நிலையில் எனக்கு எட்டு வயதாக இருக்கும்போது, 'பைலட்ஸ்' என்ற மலையாளப் படத்தில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கும் வாய்ப்பு வந்தது. என் அப்பாவும் அம்மாவும் சரி என்று சொல்லிவிட்டார்கள். அந்தப் படத்தைத் தொடர்ந்து மேலும் சில படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்தேன்.

அதேநேரம் படிப்பிலும் கவனம் செலுத்தி வந்தேன். எனக்கு ஆடை வடிவமைப்பாளர் ஆகவேண்டும் என்ற ஆசை இருந் தது. இதற்காக படிக்க சென்னை வந்தேன். 'ஃபே'ன் ரெக்னோலஜி' படித்து முடித்துவிட்டு மீண்டும் கேரளா போனதும் கதாநாயகியாக நடிக்க வேண்டும் என்கிற ஆசை வந்துவிட்டது. முதலில் அப்பாவிடமே, "நீங்க தயாரிக்கிற படத்தில் அறிமுகப்படுத்துங்கள்" என்று வாய்ப்புக் கேட்டேன். ஆனால், அவர் மாட்டேன் என்று சொல்லிவிட்டார். அடுத்த சில மாதங்களில் பிரியதர்'ன் இயக்கத்தில் 'கீதாஞ்சலி' படத்தில் நடிக்கும் வாய்ப்பு வந்தது. நல்ல கதாபாத்திரம், சிறந்த இயக்குநர் என்பதால் அப்பாவும் அம்மாவும் உடனே சம்மதித்து விட்டார்கள். அதுதான் என் முதல் படம். தமிழில், 'இது என்ன மாயம்' படம் மூலமாக அறிமுகமானேன். (சிரிக்கிறார்).

ஆடை வடிவமைப்பாளர் ஆசை என்னவானது?

திரைத் துறைக்குள்ளேயே இன்னொரு பக்கம் அந்தக் கனவையும் நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறேன். குறிப்பாக நான் நடிக்கிற படங்களில் என்னுடைய ஆடைகளை நானே வடிவமைத்துக்கொள்கிறேன். "கண்ணுக்கு அழகாவும் இருக்கிறது. அளவுக்கு அதிகமான ஆரவாரமும் இல்லையென்று நண்பர்கள் பாராட்டுகிறார்கள்.

நடிப்பு, ஆடை வடிவமைப்பு தவிர வேறு ஈடுபாடுகள்?

படிக்கும்போது நான் ஒரு விளையாட்டு வீராங்கனை.நீச்சல், ரென்னிஸ், கிரிக்கெட் என்று பலவற்றில் கலக்கியிருக்கிறேன். நிறையப் போட்டிகளில் பரிசும் வாங்கியிருக்கிறேன். நன்றாக வரைவேன். இசையிலும் ஆர்வம் உண்டு. இந்துஸ்தானி கற்றுகொண்டேன். கீ போர்டு, வயலின் வாசிப்பேன். ஓரளவு பாடவும் செய்வேன். திரைத்துறையில் பாடுவதற்கு வாய்ப்புக் கிடைத்தால் நிச்சயம் பாடுவேன். (சிரிக்கிறார்)

(தொடர்ச்சி மறு பக்கம்...)

## Math Tutorial - 333



### Questions 333

(1) Solve the following equations

(i) Log x+log3= log 12

(ii) $Log_2 (x+2) + Log_2 \; x=3$

(ii) $Log_2 (x-2) + log_2 (x+1) = 2$

(2) Assume the annual rate of inflation will average 5% over the next ten years. Write an equation to represent the approximate cost C. of goods or services during any year in that decade.

(3) For what values of m does the function

$y= Ac^{mt}$ satisfy the following equation

$$\frac{d^2y}{dx^2} + \frac{dy}{dx} - 6y = 0$$

(4) Find the parametric equation for the line that passes through the point (0,-1, 1) and the mid-point of the line segment from (2, 3, 2) to (4,-1, 5).

(5) Find the scalar equation of the line which is perpendicular to the line 2x-3y+18=0 and has the same y-intercept as the line (x, y) = (0, 1) + t (-3, 4)

### Answers to Tutorial 332

(1) The right bisector of AB is y=6. The right bisector of AC is x=3. The circle has centre (3,6), its radius is $\sqrt{\{(3-1)^2(6-4)^2\}}$ $=\sqrt{8}$

The required equation is $(x-3)^2 + (y-6)^2 = 8$

2) The number of one letter word is 4; two letter words 4x3=12 ; three letter words 4.3.2=24 and four letter words 4.3.2.1.=24 Total number of words is 64.

(3)Given vector $\vec{a} = a\,i - 3g + k = (4\text{-}3,1)$. A vector parallel to the xy plane has the same form $\vec{u} = (p,q,o)$. Since $\vec{a}$, perpendicular to $\vec{u}$ . $\vec{a}.\vec{u} = 0$ and 4p-3q=0. Choosing p=3 and q=4 gives a vector $\vec{u}$ (3,4,0) which is

perpendicular to vector $\vec{a}$. Now $|\vec{u}| = \sqrt{9+16} = 5$. Therefore $\vec{a}$ in the x,y plane to $\vec{a}$ is $\vec{u}$= (3/5, 4/5,0)

4) $4x^2y-3y=x^3$

$8xy+\frac{dy}{dx}(4x^2)-3\frac{dy}{dx}=3x^2$

$\frac{dy}{dx}(4x^2-3)=3x^2-8xy$

$\frac{dy}{dx} = \frac{3x^2-8xy}{4x^2-3}$

$64^{1/6} = 8^{1/3}$

(5) 64 camel be expressed as a power of 8 that is $8^2$. But $(8^2)^{1/6}$ is the power of a power and we then keep the base and multiply the exponent to get $8^{2 \times 1/6}$ or $8^{1/3}$.

By Mr.S.F Xavier (Teacher)
Tel: 647 340 9490 / 416 732 2228

# ரஜனியுடன்...

நடிகர் விஜய் உடன் நடிக்கும் அனுபவம்?

உண்மையிலேயே இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு ஒரு பெரிய வாய்ப்புக் கிடைக்குமென்று நான் எதிர்ப்பார்த்திருக்கவில்லை. கேரளாவிலும் விஜய்க்கு நிறைய ரசிகர்கள் உண்டு. அவரது 'போக்கிரி' படம் வந்தப்போது நான் பள்ளியில் படித்துக்கொண்டு இருந்தேன். அதையொட்டி பத்திரிகையாளர் சந்திப்புக்காக விஜய் திருவனந்தபுரம் வந்திருந்தார். எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் ஓட்டலில்தான் அந்தச் சந்திப்பு நடைபெற்றது. விஜயைப் பார்ப்பதற்காக அன்று ரசிகர்கள் கூட்டம் அலைமோதுகிறது. அந்தக் கூட்டத்தில் ஒருத்தியாக, ரசிகையாக தூரத்தில் நின்றபடியே விஜய் முகத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். அன்று ஆசைப்பட்டும் அவர் பக்கத்தில் நெருங்க முடியவில்லை. ஆனால், இன்று நான் அவருக்கு ஜோடியாக நடிக்கிறேன். (சிரிக்கிறார்)

'பைரவா' பூஜையில்தான் முதன்முதலில் விஜயை நேரில் சந்தித்தேன். "உங்களுடைய பேட்டியை டிவியில் பார்த்திருக்கிறேன். நல்லா பேசுகிறீர்கள்" என்று சொன்னார். இது கனவா நிஜமா என்று என்னை நானே கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். சமீபத்தில் பின்னிமில்லில் ஒரு பாடல் காட்சி படப்பிடிப்பு. பிரமாதமாக நடனமாடும் விஜய்க்கு இணையாக எப்படி ஆடப் போகிறோமோ என்று பயம். கேரவனில் உட்கார்ந்து அலங்காரம் செய்கிறேன். லிப்ஸ்டிக் போடும் போது கை நடுங்கி கன்னத்தில் படுகிறது. என் எண்ண ஓட்டத்தை உணர்ந்தோ என்னவோ, அன்று விஜய் எனக்கு ஊக்கம் கொடுத்து நடிக்க வைத்தார். "உன்மேல ஒரு கண்ணு' பாடலில் உங்கள் முகபாவனை நல்லாயிருந்தது" என்று பாராட்டினார். அது எனக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது.



அடுத்து எந்தப் பெரிய நடிகருடன் நடிக்க வேண்டுமென்று ஆசைப்படுறீங்க?

ரஜினி, அஜித், சூர்யா என்று இந்த பட்டியல் பெரியது. முதலில் ரஜினி. அம்மா அவருடன் நடித்திருக்கிறார். ஒருமுறை அவரை சந்தித்திருக்கிறேன். அம்மாதான் அறிமுகப்படுத்தி வைத்தார். அவருக்கு ஜோடியாகவோ மகளாகவோ நடிக்க வேண்டும். மணிரத்னம் இயக்கத்திலும் நடிக்கும் லட்சியம் இருக்கிறது.

நடிக்க ஆசைப்படும் கனவு கதாபாத்திரம்?

இரட்டை வேடம், கண் தெரியாத பெண் என்று இதுவரை நடித்த படங்களிலேயே சவாலான கதாபாத்திரங்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் என் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தி என்னை நிரூபித்திருக்கிறேன். அந்தளவுக்கு ஒரு திருப்தி. ஆனாலும், 'குயின்' இந்திப் படத்தில் கங்கனா ரனாவத் நடித்த கதாபாத்திரம் மாதிரி இன்னும் சவாலான ஒரு கதாபாத்திரங்களில் நடிக்க வேண்டுமென்று ஆசை இருக்கிறது.


குஷ்புவுக்கு கோயில் கட்டியவர்கள் தமிழ் ரசிகர்கள். இன்று அவர்களது கனவு நடிகை நீங்கள்தான். இதற்குள் ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப் போகிறோம் என்று வந்திருப்பார்களே?

வந்தார்கள். ரசிகர் மன்றம் ஆரம்பிக்க வேண்டுமென்று பேசினார்கள். அவ்வளவு அன்பாக இருக்கிறார்கள். அன்புக்கு நன்றி, அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என்று தவிர்த்துவிட்டேன். முதலில் உங்கள் குடும்பம் அப்புறம்தான் சினிமா என்று அறிவுரை சொல்லி அனுப்பியிருக்கிறேன். (சிரிக்கிறார்)

லட்சியம்?

எனக்கொரு அக்கா இருக்கிறார்கள். அவர்களுக்கும் சினிமாவில் சாதிக்கும் ஆசை இருக்கிறது. இயக்குநராக வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதற்காக 'ஃபிலிம் கோர்ஸ்' தேர்வு செய்து படித்துள்ளார்கள். 'ஷாருக்கானின் 'ரெட் சில்லி' நிறுவனத்திலும் வேலை பார்த்திருக்கிறார்கள். அப்பா தயாரித்து, அக்கா இயக்கும் படத்தில் அம்மாவும் நானும் நடிக்க வேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசை. (சிரிக்கிறார்)


SRI GANESHA ASTROLOGY & LOVE PSYCHIC



I will succesed in all unfinished works!
ஜோதிடம், எண்ஜோதிடம் மற்றும் முகநாடி ஆகியவற்றில் உலகரீதியில் புகழ்பெற்றவர்



மிக திறமை வாய்ந்த இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பண்டித் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பத்தை நளவவிடாதீர்கள் அவரைச் சந்தித்ததின் மூலம் உலகம் முழுவதும் பலபேர் நன்மை அடைந்துள்ளார்கள்

WHO INHERITED ASTROLOGIST PRACTICE PASSED DOWN FROM GENERATIONS.

35 YEARS EXPEREANCE

100% உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு

*Face Reading *Hand Reading *Date of Birth & *Horoscope Reading

உங்களுடைய வேலை, பணம், திருமணம், கல்வி, தொழில், காதல், வீடு, உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகள், செக்ஸ் சம்பந்தமான பிரச்சினைகள், பிள்ளைகள் சம்பந்தமான பிரச்சினைகள், கணவன் மனைவி பிரச்சினைகள், வழக்கு பிரச்சினைகள், குடும்ப பிரச்சினைகள், நோய்கள், வெளிநாடு, அரசியல், சினிமா சம்பந்தமான முன்னேற்றம், பேய் பிசாசுகள் சம்பந்தமான பிரச்சினைகள் பூஜைகள் மூலம் இல்லாமல் செய்யப்படும்.

*Removes Kala, Jaadu, Witchcraft, Evil Spirits & Black Magic*

மந்திரங்கள், லக்ஷ்மி பூஜை, ருத்ரா அபிஷேகம், மாங்கல்ய பூஜை போன்ற சகல பூஜைகளும் செய்து தரப்படும்.

MEET ONE TIME & SEE YOUR FUTURE CHANGING 100%

*7 Days a Week - 10:30 am To 9:00 pm*

Pandith: Rajuguru 647-745-7879

1938 Weston Road, Toronto ON. M9N 1W2 North York - (Weston & Lawrence)

# EDUCATION

## Review Questions16-21

### ➢ ADVANCED FUNCTIONS 12

(i) Graph the function, $f_{(x)} = \frac{x^3+27}{x^2-5x-24}$

(ii) Determine the equation of the function that satisfies the following characteristics:

$$x-int = -\frac{3}{2}\ ; y-int = -\frac{45}{8}$$
$$H.A,\ y = -6\ ; V.A, x = 4, 2$$

(iii ) Determine a translation that will transform the graph of $f_{(x)} = log_2 x$ on to the graph of $g_{(x)} = log_2 \frac{1}{8}x$

### ➢ CALCULUS & VECTORS

Differentiate the following,

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ (ii) $\sqrt{1+x^2}. sin^3\sqrt{x}$

(ii) Is there any solution for the following,

$P_1 = 2x + 3y - 4z = -5$
$P_2 = x - y + 3z = -201$
$P_3 = 5x - 5y + 15z = -1004$

Support your answer with calculations.

Answer key
16-21 - next issue

☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

### ➢ BIOLOGY 12 Photosynthesis

Describe the cyclic and non-cyclic photophosporilation and its importance in carbon fixation.

## Answer Key : 16-20

### ➢ BIOLOGY 11 – Genetics

(i) Galactosaemia – is a rare genetic metabolic disorder caused by gene mutation. Body unable to process the sugar galactose due to the deficiency of an enzyme that process the galactose.
This condition follows due to autosomal recessive gene.

Both parents are carriers. So probability of having 3 children unaffected by galactosaemia is ¾ × ¾ × ¾ = 27/64

(ii) Green - G ; Round –R
Yellow - g ; wrinkled – r
green wrinkled X green wrinkled
→ green wrinkled × yellow wrinkled
Resulting green : yellow = 3: 1
Therefore parents must be heterozygous for the colour. Wrinkled is recessive, both parents carry - rr

Genotype of the parents - Ggrr

(iii) colour blindness- Genes associated with colour vision are found on the X- sex chromosome (XX) while males have only one X. (XY). Therefore males more likely to get colour blindness

### ➢ BIOLOGY 12 – Macro molecules

Polypeptides are linear polymer of aminoacids. The length of a polypepetide ranges from a few amino acids to more than a thousand. These are called primary structures of protein.
Secondary structures are formed by folding and coiling of polypeptides due to large number of H bonds – α helices and β-pleated sheets.
Further coiling of secondary structures produces tertiary structures which are formed due disulfide bridges and co-valent bonds.

### CHEMISTRY 12 CHEM - Organic

from 1-propanol.

(a) + con. $H_2SO_4$ (160°C) → Propene
(b) + $H^+/Cr_2O_7^{2-}$ → Propanal
Distillation
Or use PCC/ $CH_2Cl_2$ propanal
(c) + $H^+/Cr_2O_7^{2-}$ → Propanoic acid
(d) + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + $H^+/H_2O$ → 2-proponol
(e) + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + HBr → 2-bromo propane

(f) + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + $H^+/H_2O$ → 2-propanol
2-propanol $H^+/Cr_2O_7^{2-}$ → Propanone

# ஜெயலலிதா...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

முதல்வர் ஜெயலலிதா காவிரிப் பிரச்சினை தொடர்பான கோப்புகளில் கையெழுத்திட்டார், உள்ளாட்சி தேர்தல் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார் எனப் பல தகவல்கள் வெளியாகின. இவை எல்லாம் உண்மையென்றால் அதிகாரிகளுடன் ஜெயலலிதா கலந்து ஆலோசனை நடத்திய படங்களை வெளியிடலாமே என்ற கலைஞரின் கருத்து சரியான கேள்விதானே?

முதல்வர் அம்மா அவர்கள் எந்தச் சூழலில் கையெழுத்திட்டார் என்பது எனக்குத் தெரியாது. உள்ளாட்சித் தேர்தலை அமைச்சர்களே நடத்தலாம். முதல்வர் கையெழுத்திட வேண்டிய கோப்புகளை சி.எம். ஆஃப்டர் இஷ்யூ என்று எழுதிவிட்டு அமைச்சர்களே கையெழுத்துப் போட்டுவிட்டுப் பணிகளைத் தொடங்கலாம். முதல்வர் சிகிச்சை முடிந்துவந்து பார்த்துக் கொள்வார்.

சரி, ஜெயலலிதா தற்போது எப்படியிருக்கிறார்? மருத்துவர்களைத் தாண்டி அவரைக் கூட இருந்து கவனித்துக் கொள்வது யார்?

அம்மாவுக்கு உலகத்தரம் வாய்ந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்தச் சிகிச்சை பலனளிக்கிறது என்று மருத்துவர்களே சொல்கிறார்கள். அப்பல்லோ உயர் ரக மருத்துவமனை. அவர்கள் கண்காணிப்பதே போதும். என்றாலும் உலகளவில் பிரபலமான மருத்துவர்களையும் வரவழைத்துப் பார்க்கிறார்கள். முன்பைவிட தற்போது அம்மா உடல்நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அம்மாவுடன் என்றும் இருப்பவர்கள்தான் தற்போதும் உடனிருக்கிறார்கள்.

முதல்வர் தீவிர சிகிச்சையில் உள்ள நிலையில் கட்சியை வழிநடத்துவது யார் என்கிற கேள்வியும் பதட்டமும் ஏற்பட்டுள்ளதே, அதிமுக ஒற்றைத் தலைமையை மட்டுமே நம்பியிருப்பதுதான் இதற்குக் காரணமா?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மக்கள் செல்வாக்குப் பெற்ற இயக்கங்கள் அனைத்தும் ஒற்றைத் தலைமையைத் தான் நம்பியுள்ளது. இரண்டாம் நிலைத் தலைவர் யார் என்பதை நாமாகத் தீர்மானிக்க முடியாது. தேவைப்படும் போது சூழ்நிலைக்கேற்ப இயல்பாகவே வருவார்கள். எம்.ஜி.ஆர். காலத்திலேயே அடுத்த நிலைத் தலைவர்கள் இருந்தது இல்லை. அவர் மறைவுக்குப் பிறகுதான் அம்மா அவர்கள் இயல்பாகவே அடுத்த தலைவராகப் பொறுப்பேற்றார். எப்பொழுதும் வெற்றிடம் இயற்கையாகவே மூடப்படும். அடுத்த தலைவர் யார் என்று முன்கூட்டியே அறிவிப்பது வாரிசு அரசியலுக்குத்தான் அடித்தளம் அமைப்பதுபோல் ஆகிவிடும். கட்சித் தொண்டர்களும் பொதுமக்களும் எடுக்க வேண்டிய முடிவு அது.

ஜெயலலிதா சிறையில் இருந்தபோது அ.தி.மு.க தொண்டர்களிடம் வெளிப்பட்ட அழுகை, வேதனையுடன் ஒப்பிடும் போது, தற்போது மருத்துவமனையில் இருக்கும் நிலையில் அழுகையும் கண்ணீரும் குறைவாக இருக்கிறதே?

அம்மா விரைவில் நலம் பெற்று வருவார் என்ற நம்பிக்கை தான் காரணம்.

முதல்வரின் உடல் நலம் விசாரிக்க வந்த இடத்திலும் வைகோ வழக்கம் போல கலைஞரை வசைபாடியிருக்கிறாரே இதற்குப் பின்னால் அரசியல் காரணங்கள் ஏதாவது இருக்கிறதா?

ஓர் அரசியல் தலைவர் எந்த இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவரது உடல்நிலை சரியில்லாதபோது வந்து பார்த்து வாழ்த்துவது வரவேற்கத்தக்க பண்பாடாகும். இது ஓர் ஆரோக்கியமான அரசியல் பண்பாடு. அப்படி வைகோ முதல்வரைப் பார்க்க வந்ததை வரவேற்கத்தான் வேண்டும். ஆரம்பக் கட்டத்தில் திமுக வளர வைகோ கடுமையாக உழைத்தார். ஆனால், அவர் ஸ்டாலினுக்குப் போட்டியாக வந்துவிடுவார் என்று ஓரங்கட்டிவிட்டார்கள். தன் உழைப்பை உறிஞ்சிக்கொண்டு வாரிசு அரசியலுக்காகத் தன்னை வெளியேற்றிவிட்டார்களே என்ற ஆதங்கம் வைகோவுக்கு இருக்கலாம் அதனால் அப்படிப் பேசியிருக்கலாம். அதில் தவறுமில்லை, வியப்புமில்லை.

அ.தி.மு.க., தி.மு,க., பா,ம,க., தே,மு,தி,க. என்று பல கட்சிகளில் இருந்துள்ளீர்கள். அந்தந்தக் கட்சித் தலைமைகளிடம் உங்களுக்குப் பிடித்தது என்ன?

புரட்சித்தலைவர் எம். ஜி. ஆரிடமும், புரட்சித்தலைவி அம்மா அவர்களிடமும் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக தங்களது பொது வாழ்க்கையை அர்ப்பணித்த குணம் பிடிக்கும். உடனுக்குடன் முடிவெடுக்கும் தன்மை கலைஞரிடம் பிடிக்கும். அதனால்தான் அவரால் அரசியலில் தாக்குப்பிடிக்க முடிகிறது. ஆனால், அவர் உடனுக்குடன் முடிவெடுப்பதெல்லாம் அவரது குடும்ப நலனுக்காகத்தான் என்பது பிரச்சினைக்குரியது.

ராமதாஸ், முழுக்க முழுக்க சுயநலம் பிடித்தவர். ஆட்சி அதிகாரம் இல்லாமலேயே சாதி அரசியலை வைத்தே பெரிய கோடீசுவரரானவர். பணம்தான் அவருக்கு முக்கியம். கலைஞரையே அவர் முந்திவிட்டார். கலைஞர்கூட ஆட்சிக்கு வந்துதான் சம்பாதித்தார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அன்புமணி ஜெயித்தது அப்போது விஜயகாந்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)


Niru BRAND
மீண்டும் ஓர் புதிய அறிமுகம்.........!!
Niru Brand Tamarind Paste!!!
புளி விதைகள் முழுமையாக நீக்கப்பட்டது...
இலகுவான சமையல் தேவைகளுக்கு மிக உகந்தது...
நீர் விட்டுக்கரைக்க வேண்டிய அவசியமில்லை...
ARIND PASTE
Pâte de Tamarin
Niru BRAND
Premium Quality
Ready to use
தரம், சுவை என்றென்றும்!!!
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது

343 நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



காக்க காக்க கதிர்வேல் காக்க
எமது உடம்பின் ஒவ்வொரு அங்கமும் பாதுகாக்கும்படி
கந்தனை கடம்பனை கதிர்வேலனை முருகனை வேண்டுகி-
றோம்.




பேசிய வாய்தனை......பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவை செவ்வேல் காக்க (கந்தசஸ்டி கவசம்)



உலகில் பலருக்குப் பிரச்சினையே அவர்களின் நாக்குத்தான்.
இடம் பொருள் ஏவல் தெரியாமல் கதைப்பது.
ஷஷயாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கு பட்டு'' -திருக்குறள் 127
அடக்கமுடமை.



உலகண்ணை நேற்றுப் பேப்பரிலை
இராவணன் பயங்கரவாதி என அண்மையில் ஒரு
வைபவத்தில் குறிப்பிட்டிருக்கிறார் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி என ஐபொட்
சொல்லிக் கொண்டிருக்க...
ஆட்டிலறி அன்னம்மா சேர்ந்து தாளம் போட்டா...
ஓம் அவர் எப்பவும் அப்பிடித்தான்.

அமெரிக்கா வந்தபொழுது
மகாத்மா காந்தியின் தந்தை மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பதை
மோகன் லால் எனக் குறிப்பிட்டார். மோகன்லால் பிரபல மலையாள
நடிகர்.



செக்கண்ட்புளோர் செல்லம்மா சொன்னா நான் நாலாம் வகுப்பிலை மகாத்மா
காந்தியின்ரை சரித்திரம் படிச்சனான்..
மகாத்மா காந்திக்கு திரும்புகிற இடமெல்லாம் சிலை. ஆண்டுக்கு ஆண்டு
பிறந்ததினம் நினைவுதினம்
ஒரு பிரதமருக்கு அவரின் சரித்திரம் தெரியாது?



மோடி அவர்கள் ருஸ்சியா சென்றிருந்த பொழுது இந்திய தேசியகீதம் ஒலிக்க
அமைதியாக நிற்காமல் நடக்கத் தொடங்க ருஸ்சிய அதிபர்
அவரைத் தடுத்து நிறுத்திய காட்சி ஊடகங்களில் வெளியானது.



இங்கு நடைபெறும் நிகழ்சிகளில் பல படித்தவர்கள் முக்கிய
பிரமுகர்கள் தேசிய கீதம் தமிழ்த்தாய் வாழ்த்து அமைதி வணக்கம்
நடைபெறும்பொழுது அமைதியாக நிற்பதில்லை நடப்பது கதைப்பது
செல்போன் பாவிப்பது.




தீபாவளி அமளி துமளி பேஸ் புக் லைக் வாழ்த்துக்கள் உங்கள்
சாறி அழகாக இருக்கு முத்தின கத்தரிக்காய் சாறியில் நீங்கள் ஒருபக்கம்
சமந்தா மாதிரியும் ஒருபக்கம் பாகுபலி அனுஸ்கா போல இருக்கிறீங்க எனப்
பொய் பேஸ்புக் புழுகலுடன் தீபாவளி முடிவடைந்து விட்டது.

நலமாக இருக்கும் பிரபலங்களை நலமா.. குடும்பம் நலாமா எனத் திரும்பத்
திரும்ப விசாரிப்பவர் பலர். ஆனால் இன்று முதியோர் இல்லங்களில்
ஆதரவில்லாத முதியவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் எப்படியுள்ளனர்?
உண்டார்களா? உறங்கினார்களா? எனக் கேட்பாரில்லை.

உலகர் நினைவு முழுவதும் முருகேசரைப் பற்றித்தான்.
ஷஷஉன்னைக்கண்டு நானாட என்னைக்கண்டு நீயாட'' என கல்லூரி
விழாக்களில் வரிகள் பிழை பிழையாக சங்கீத ஞானமின்றிப் படித்த ஞாபகம்
மனதில் அலைமோதியது, கண்ணில் நீர் தழும்பியது.



ரூபன் எடுத்துக்கொடுத்த வேட்டி சால்வை சேட்டுடன்
புறப்படவும் ரூபன் வெளியே வரவும் சரியாக இருந்தது.
எங்கை போறியள் என அமைதியாகக் கேட்டான் ரூபன்
(வழமையாக அதட்டிக் கேட்ட காலங்கள் போய்விட்டன).
முருகேசர் வீட்டை என அனுங்கினார் உலகர். நானும் அதாலை தான் போறன்
வாங்கோ இறக்கிவிட்டிட்டு போறன் என சொல்லும்போதே செக்கண்ட்புளோர்
செல்லம்மா ஜாக்கெட்டைப் போட ரூபன் ஷஉம்முடைய வானிலை எத்தனை
சீற்?' எண்டா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி. சரி வாறவை வாங்கோ என்றதும்
எல்லோரும் புறப்பட்டனர். ரூபன் உம்முடைய வானிலை கீற்றர் இருக்குத்தானே?
பிகோஸ் சரியான குளிர் என்றா ஐபொட் அகிலா.
முருகேசர் அறைக்குள் சென்றதும் ஒரு வாரமாகத் துப்பரவு செய்யாத
சாப்பாட்டுக் கடையின் மணம். தீபாவளிக்காக முருகேசரை விசிற் பண்ண
வந்தவர்கள் கொண்டுவந்த கொத்து றொட்டி, மசால தோசை, சிக்கின் புரியாணி
எல்லாம் பழுதாகி மணம் வீசினால் எப்படியிருக்கும்.

ஐபொட் அகிலாண்டேஸ்வரி மூக்கை பொத்திக்கொண்டா..
ஏன் ஆக்கள் விசிற் வரும்போது இவை அவருக்கு தேவையா? சாப்பிடுவாரா?
என தெரியாமல் பணத்தைச் செலவழித்து வாங்கிவந்த உணவெல்லாம் குப்பைத்
தொட்டியில். இதேவேளையில் ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர்
செல்லம்மாவும் துப்பரவு வேலையை முடித்து விட்டனர். முருகேசர் அவர்களைப்
பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார். அவர் கண்களில் வழிந்த நீரைத் தனது
சால்வையால் துடைத்து விட்டார் உலகர்.

நட்பு என்பதற்கு அகராதி தேவையில்லை. சிலர் அவ்வப்போது நடக்கும்
நடைமுறை செயல்களிலேயே அறிந்து கொள்ளலாம்.
உன் கண்ணில் நீர் வழிந்தால்....

செல்லம்மா..யு..நோ வட்.... கனபேர் நன்மை தீமைகளுக்கு வீடுகளுக்கு விசிற்
போகேக்கை கனக்க சாப்பாடு கொண்டு போறவை. அது அவர்களுக்கு கூட...
வேறு ஆட்களுக்கும் அது கொடுக்க முடியாது. அநியாயமாக சாப்பாட்டை
வீணாக்குகிறார்கள் என விழிப்புணர்வு சொற்பொழிவை நிகழ்த்தி முடித்தா
ஐபொட் அகிலாண்டேஸ்வரி.




உண்ண ஒருவர்க்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை
அழித்திடுவோம்.

பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அவர்கள் கடந்த கிழமை ஒரு நிகழ்சிக்கு
ஹமில்ரனுக்கு போனவராம்...என்று தொடங்கினா செக்கண்ட்புளோர்
செல்லம்மா. ஓம் அங்கைதான் ஒரு லேடி கொடுத்த வாக்குறுதியை
காப்பாற்று "Keep your promises"! எனக்கூறி பூசணி விதைகளால்
எறிந்திருக்கிறா. பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் உடனே
அந்தப்பெண்மணியைக் கைது செய்தவையாம் என்று நேரடி
வர்ணனை போல சொல்லி முடித்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.



எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க.......நல்ல காலம்
அவவின்ரை கையிலை தேங்காய் ஆப்பிடேல்லை என முணுமுணுத்தா
ஆட்டிலறி அன்னம்மா.



ரூபனும் ரூபியும் தீபாவளி விசேட காட்சி பாத்துவிட்டு வந்தனர்.
உதுதான் ரூபி தீபாவளிக்கு வாங்கின முத்தின கத்தரிக்காய் சாறி
என செக்கண்ட்புளோர் செல்லம்மா சொல்ல...
என்னபடம் பாத்தனீங்கள் என ஐபொட் அகிலாண்டேஸ்வரி
கேட்க....
முத்தின கத்தரிக்காய் என்று ரூபன் சிரித்துக்கொண்டு சொல்ல
எல்லோரும் தம்மை மறந்து சிரித்தனர்.





தீபாவளி ஸ்பெசல்
சமையலுக்கு பிஞ்சுக் கத்தரிக்காய்.
சம்சாரத்திற்கு முத்தின கத்தரிக்காய் (சாறி)



ஞாபகம் இருக்கிறதா? நவம்பர் 1....15.



01. ஷேக்ஸ்பியரின் ஷஒதெல்லோ' நாடகம் முதன் (1604ல் லண்டனில்)
முதலாக மேடையேறியது. அதேபோல 1611 இல் ஷத ரைம்பெஸ்ற்'
என்ற நாடகம் முதல்தடவையாக மேடையேறியது.

02. விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்
சு.ப. தமிழ்ச்செல்வன் நினைவுதினம். (1967-2007)

05. கந்தசஸ்டி சூரன்போர்.

05. நேரமாற்றம்

10. நடராஜா ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழர் தேசிய
கூட்டமைப்பு நினைவுதினம் (1962-2007)

11. 1933 யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டது. (1983இல் அரச
உதவியுடன் அரசபடைகளால் எரிக்கப்பட்டது)

11. ஐப்பசி கடைசிவெள்ளி.

11. REMEMBRANCE DAY

14. உலக நீரிழிவு நாள்.

# ஜெயலலிதா...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

துக்கு இருந்த செல்வாக்கால்தான். அனைத்தும் விஜயகாந்துக்கு விழுந்த வாக்குகள்தான் என்பதற்குக் கடந்த சட்டமன்றத் தேர்தலில் அன்புமணி பென்னாகரத்தில் தோற்றதே சாட்சி.

விஜயகாந்த், ஆரம்பத்தில் மக்களுக்குச் செய்யவேண்டும் என்கிற நல்லெண்ணத்தில்தான் இருந்தார். ஆனால், மக்கள் கூட்டத்தைப் பார்த்து எம்.ஜி.ஆரை விடப் பெரிய எம்.ஜி.ஆர் நான் தான் என்கிற நினைப்பு அவருக்கு வந்துவிட்டது. அதுவே அவரது வீழ்ச்சிக்கான காரணம்.

விஜயகாந்த் தேமுதிகவை ஆரம்பித்த பின்னர் அதில் இருந்த அனுபவம் வாய்ந்த மூத்த அரசியல்வாதி நீங்கள் மட்டும்தான். உங்களுக்கு அவர் நிறைய முக்கியத்துவமும் கொடுத்து வந்தார். இந்நிலையில் ஏன் வெளியே வந்தீர்கள்?, கடந்த சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி..க. சந்தித்த மோசமான தோல்வியை எப்படிப் பார்க்கிறீர்கள்?

மிகப்பெரிய நம்பிக்கையோடு ஆரம்பத்தில் தே.மு.தி.க.வுக்கு மக்கள் ஆதரவு கொடுத்தார்கள். இதனைப் பார்த்து நிறைய பேர் நம்பிக்கையுடன் கட்சி உறுப்பினராகச் சேர்ந்தார்கள். ஆனால், கட்சி நிர்வாகத்தில் விஜயகாந்த் அவர்களின் குடும்பம் தலையிட்டுக் குழப்பத்தை ஏற்படுத்தியது, அப்படி நம்பிக்கையுடன் வந்த பலபேர் விரக்திக்கு ஆளானார்கள். பலர் கட்சியைவிட்டு வெளியேறினர். கடைசி தோல்விக்குப் பின்னர் வெளியேறுபவர்கள் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. வேகமாக வளர்ந்துவந்த ஓர் அரசியல் கட்சி வீழ்ந்துவிட்டது. தமிழ்நாட்டு அரசியலுக்கு தே.மு.தி.க. தேவையில்லை என்று மக்கள் நினைக்கும் ஒரு நிலையை அடைந்துவிட்டது.



1956ஆம் ஆண்டிலிருந்து நான் அரசியலில் இருந்து வருகிறேன். இந்த நீண்ட அனுபவங்களின் அடிப்படையில் அவர்களை வழிநடத்தவும் அரசியல் அடிப்படைகளைச் சொல்லிக்கொடுத்து அவர்களுக்குப் புரிய வைக்கவும் என்னால் ஆன முயற்சிகளை எடுத்தேன். ஆனால், அதனைப் பயன்படுத்திக்கொள்ளத் தலைமை தவறிவிட்டது. என் ஆலோசனைகளைக் கேட்பதில்லை, அவர்களாகவும் சரியாக செயல்படுவதில்லை. பின்பு எப்படி அந்த அரசியல் கட்சி வளரும்? 2011இலேயே தே.மு.தி.க.வுக்கு எதிர்காலம் இல்லை என்பதை உணர்ந்துவிட்ட நிலையில்தான் அதிமுகவுடன் கூட்டணி அமைக்க வைத்தேன். அதை வைத்தாவது முன்னேறியிருக்கலாம். ஆனால், தனக்குச் செல்வாக்கு இருக்கிறது, தான்தான் முதல்வர் ஆக வேண்டும் என்று அனைத்துக் கட்சிகளையும் பகைத்துக்கொண்டார்.

முதல்வருடன் இருந்து, அவரது உடல் நிலை குறித்த தகவல்களை மறைத்துக்கொண்டிருக்கும் சசிகலாவையும் அவரது உறவினர்களையும் அதிமுக தொண்டர்கள் விரட்டியடிக்க வேண்டும் என்றதோடு சி.பி.ஐ. விசாரணையையும் கேட்டுள்ளார், சமீபத்தில் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா புஷ்பா?

சசிகலா புஷ்பாவே ஒரு சர்ச்சைக்குரிய நபர்தான். அவர் ஏன் அப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார் என்பது நாடறிந்த வி'யம். முதலமைச்சர் உடனிருப்பதால் சசிகலா அவர்களைப் பற்றிக் குறை சொல்வது நியாயமில்லை. முதலமைச்சர் விருப்பப்பட்டுத்தான் அவர் உடனிருக்கிறார். எங்களுடைய எதிரிகள் நேரடியாகச் சொல்ல முடியாததை சசிகலா புஷ்பா மூலம் நிறைவேற்றி வருகிறார்கள். அதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையே நல்லதொரு நட்பு இருந்தும், காவிரி விவகாரம் பற்றி பேசச் சென்ற தமிழக எம்.பிக்களை பிரதமர் சந்திக்காமல் தவிர்த்துவிட்டாரே? மோடியின் இந்தச் செயல்பாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?

கர்நாடக முதல்வர் சித்தராமையா பிரதமரைச் சந்திக்கவேண்டும் என்று கேட்டபோது சந்திக்கவில்லை. நம்முடைய எம்.பிக்கள் சென்றபோதும் வேலையில் இருக்கிறேன் என்று நழுவிவிட்டார். மோடியைப் பொறுத்தவரை எந்தப் பக்கமும் சாயக்கூடாது என்று நினைக்கிறார். மேலும் இந்தப் பிரச்சனை முழுக்க முழுக்க உச்சநீதிமன்றக் கண்காணிப்பில் உள்ளது. அம்மா அவர்கள் 2014ஆம் ஆண்டு பிரதமரைச் சந்தித்தபோதே காவிரி மேலாண்மைக் குழுவை அமைக்கக் கோரிக்கை வைத்தார். அதை அமைத்திருந்தாலே இவ்வளவு பிரச்சனைகள் வந்திருக்காது.

உங்கள் பொழுதுபோக்கு?

கட்சிப் பணிகள் போக நேரம் கிடைக்கும்போதெல்லாம் புத்தகங்களை விரும்பிப் படிப்பேன். தற்போதுகூட ஆங்கிலத்தில் அந்தோனி பி அக்கின்சன் எழுதிய "ஏழை பணக்காரர்கள் ஏற்றத்தாழ்வு" நூலை வாசித்துக் கொண்டிருக்கிறேன். டிவியில் செய்திகள் பார்ப்பேன். எப்போ

தொடர்ச்சி 40ஆம் பக்கம்...

# 387 உயிர்களைக் காவு கொடுத்து, 30 வருடங்கள் மயிலம்பாவெளியில் அகதிகளாக வாழும் பெரிய புல்லுமலை மக்கள் மீளக்குடியமர உதவுவோம், எல்லையைக் காப்போம்.

யுத்த சூழலாலும் இனக் கலவரங்களாலும் மூன்று முறை இடம்பெயர்ந்து 387 பேரைப் பலிகொடுத்த பெரிய புல்லுமலையில் தமிழ் மக்கள் மீள்குடியேற ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

620 குடும்பங்களையும், 22 வியாபார நிலையங்களையும், ஒரு வைத்திய சாலை, ஒரு பஸ் நிலையம், வாராந்த சந்தைக் கட்டிடம் இரண்டு மகாவித்தியாலயங்களையும், பல அரச திணைக்களங்களையும் கொண்டிருந்து கடந்த கால யுத்தத்தினால் இருந்த இடமே தெரியாமல் சின்னாபின்னமான எல்லைப்புற சிறிய நகரங்களில் ஒன்றுதான் பெரிய புல்லுமலை. இது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வருகின்ற எல்லைக்கிராமமாகும்.

முன்னர் அங்கு 620 குடும்பங்கள் செல்வச்செழிப்புடன் வாழ்ந்துவந்திருந்தன. நாட்டிலேற்பட்ட போர், இனக்கலவரம் போன்றவற்றால் 3முறை100 வீதம் இடம் பெயர்ந்து மயிலம்பாவெளி பிரதேசத்தில் தஞ்சமடைந்தனர். அதாவது கடந்த 30 வருடங்களாக அங்கு மீள்குடியேற்றம் நடைபெறவில்லை. கடந்த ஆட்சியின் போது பெரிய புல்லுமலை இராணுவ சூனிய பிரதேசமாக்கப்பட்டதால் வெளியேறிய குடும்பங்கள் இடம்பெயர்ந்து



சென்ற இடங்களில் குடியிருப்பை நிரந்தரமாக்கிக்கொண்டனர். சிலருக்கு அவ்வசதி இல்லாமல் மீளக்குடியேற எதிர் பார்த்துக்கொண்டுள்ளனர். இருந்தும் சுமார் 62 குடும்பத்தினர் புல்லுமலையைச்சுற்றியுள்ள கொச்சித்தோட்டம், கொலனி, ஏற்றம், வெலிக்காகண்டி போன்ற இடங்களில் தற்காலிகமாக குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இன்றைய நிலை இந்த மக்களின் மீள்குடியேற்றத்திற்காக ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் உருத்திரன் உதயசிறிதர் பல முயற்சிகளை எடுத்துச் சில நிறுவனங்களையும் அணுகியிருந்தார்.

எகெட் நிறுவனம் 6வீடுகளையும், இந்திய உதவியில் 5 வீடுகளையும் நிர்மாணித்துள்ளன. மட்டக்களப்பு வாழ் கிறிஸ்தவ மக்கள் ஒரு கோடி ரூபா செலவில் மாதா கோயிலையும் கட்டிக்கொடுத்துள்ளதுள்ளனர். இதேவேளை அங்கு 32 இலட்ச ரூபா செலவில் ஒரு பிள்ளையார் ஆலயமும் அமைக்கப் பட்டுள்ளது. அமெரிக்காவில் வசிக்கும் புல்லு மலையைச்சேர்ந்த வைத்தியகலாநிதி டாக்டர் தம்பிராஜா நந்தகுமார் 22 இலட்சம் ரூபாவை வழங்கினார். அரசாங்கம் 8 இலட்சம் ரூபாவை வழங்கியிருந்தது. ஊர்மக்களிடம் 2 இலட்சம் ரூபாவைச் சேகரித்து ஆலய கும்பாபிசேகமும் நடத்தி தற்போது ஆலயம் தினப் பூஜையுடன் வழிபாட்டிலுள்ளது. பெரிய புல்லுமலையில் மக்களின் வருகையை அதிகரிக்கும் நோக்குடன் தான் ஆலயங்கள் முதலில் அமைக்கப்பட்டன

கனடா பாடும் மீன்கள் அமைப்பினர் கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி "பாடும் மீன்களின் இரவு" எனும் நிதிசேர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர். அதன் மூலம் 2.5 மில்லியன் ரூபாவைத் திரட்டி அந்த நிதி மூலம் 6 வீடுகள் 4 விதவைகளுக்கும் ஒரு குடும்பஸ்தருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. மற்றும் தபால் நிலையம், கிராம சேவையாளர் அலுவலகம் என்பன நிர்மாணிக்கப்பட்டு கடந்த 24-09-2016 அன்று வீடுகள் அனைத்தும் திறந்து வைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப் பட்டது

அங்கு வாழ்வாதாரத்திற்குரிய பல தொழில்வசதிகள் இருந்தும் வீட்டு வசதியும் வயல் காணிகளை செய்வதற்குரிய மூலதனம், பால் பண்ணைகளை ஆரம்பிப்பதற்கான பொருளாதார வசதிகள் ஒரு குறைபாடாகவேயுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்யும் பட்சத்தில் பெரிய புல்லுமலை கிராம மக்கள் மீள் குடியேறி எல்லையைக் காப்பார்கள் என்பது திண்ணம்.

பாபு வசந்தகுமார்
416 998 2284

# சக்கரை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கப்பட்டாலே, உணவு செரித்தல் குறைபாடு. அதிக அளவிற்கு உணர்ச்சிவசப்படுதல் ஆகியவை ஏற்பட்டாலோ கூட 'high sugar' உருவாவதற்கு வாய்ப்புண்டு.

அடுத்தபடியாக 'law sugar' மனிதனின் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை அதிகரிக்கும் வேலையை குளுகாகான் எனப்படும் ஒருவகை ஹோர்மோன் செய்து வருகிறது. குளுகாகான் ஹோர்மோன் சுரப்புத் தன்மையில் பற்றாக்குறைத் தன்மை ஏற்படுகிற பட்சத்தில், 'law sugar' பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இதுதவிர 'டயாபடிஸ் மெல்லிடஸ்' நோயாக மாறுகிற வாய்ப்பும் இருக்கிறது.

கிழங்குவகை உணவுகளில் சர்க்கரையின் அளவு அதிகமாக உள்ளது என்பதால் இதனை உட்கொள்வது, நீரிழிவு நோயாளிகளுக்கு இன்னும் அவதியை உண்டாக்கும். பாகற்காய் போன்ற ஒருசில காய்கறிகளில் நீரிழிவு நோயைக் கட்டுபடுத்துவதற்கான மருத்துவ பண்பு இருக்கிறது. சர்க்கரை நோய்க்காரர்கள் தங்களின் உணவில் பாகற்காயை அதிகமாக சேர்த்துக் கொள்வது சாலச்சிறந்தது.

### சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு விசேட உணவு

சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு விசேட சாப்பாடு என்பது வீட்டில் அபூர்வமான விடயம். நீரிழிவு வந்தால் அவர்கள் வாய்க்கு ருசியாக சாப்பிடக்கூடாதா என்ன? உலகளவில் இந்தியாவில் தான் நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம். நீரிழிவு என்று தெரிந்தும் அதற்கான மருந்து மாத்திரை சாப்பிட்டால் போதும். சாப்பாட்டில் கட்டுப்பாடெல்லாம் தேவையில்லை என்றுதான் பலரும் நினைக்கிறார்கள். எண்ணெயைக் குறைப்பதில்லை. அரிசி சாப்பாட்டைத் தவிர்ப்பதில்லை. சர்க்கரைநோய் உள்ளவர்களுக்கு நீர்ச் சத்து அதிகமுள்ள சுரைக்காய், முள்ளங்கி, வெள்ளரிக்காய், கீரை எல்லாம் அதிகம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு கலோரி குறைவான, அதேசமயம் சத்தான உணவு தேவை. வியர்வையும் சிறுநீரும் அவர்களுக்கு அதிகம் வெளியேறும்.

### சர்க்கரை நோயாளிகள் உண்ண வேண்டிய உணவு

சம்பா, கோதுமை, ரவை இட்லி

### உடற்பயிற்சியும் நீரிழிவு நோயும்

### உடற்பயிற்சியின் அவசியம் என்ன?

உடலில் அதிக எடையைக் குறைக்கிறது. இரத்தச் சர்க்கரையைக் கட்டுப்படுத்துகிறது. உடற்பயிற்சிகள் மூலம் நீரிழிவு நோய்க்காக உட்கொள்ளும் மருந்தின் அளவைப் படிப்படியாகக் குறைக்கலாம். வாழ்கைத் தரத்தை உயர்த்துகிறது.

### உடற்பயிற்சி இருதயத்திற்கு எவ்வாறு உதவுகிறது?

இரத்த ஓட்டத்தைச் சீர்ப்படுத்துகிறது. இருதயத்தை வலுவாக்குகிறது. இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. நல்ல

# ஜெயலலிதா...

39ஆம் பக்கத்தொடர்ச்சி

தாவது ஆங்கிலப் படங்களைப் பார்ப்பேன். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நடித்த 'நாடோடி மன்னன்' தான் எனக்குப் பிடித்த படம். அதிக முறை பார்த்த படமும் அதுதான்.

உங்கள் குடும்பம் பற்றி?

நான், மனைவி, மகன் என்று மூன்றே பேர் உள்ள சிறிய குடும்பம். மகன் சம்பத் அமெரிக்காவில் எம்.எஸ். படித்து விட்டு வந்து பிஸினஸ் செய்கிறார்.

எம்.ஜி.ஆர். ஆட்சியின்போது ஈழத்தமிழர் நலனுக்காக ஐ.நா.வில் பேசியிருக்கிறீர்கள். இப்போதும் ஈழத் தமிழர் பிரச்சினைகளைத் தொடர்ந்து கவனித்து வருகிறீர்களா?

ஈழத் தமிழர்களுக்காக ஐ.நா.வில் பேசக்கூடிய வாய்ப்பைப் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் கொடுத்திருந்தார். அப்போது இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தார். எங்களுக்குள் நல்ல உறவு இருந்தது. ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி முழு விவரமும் அறிந்தவர் என்ற அடிப்படையில் இந்திரா காந்தி என்னை ஐ.நா சபைக்குப் பேச அனுப்பினார். நானும் அங்கு வந்திருந்த பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளுடன் சர்வதேச முகாந்திரம் கொண்டு வரவேண்டி வலியுறுத்தினேன். ஆனால், இன்றைய சூழலில் அந்தப் பிரச்சினையின் தன்மை மாறிவிட்டது. இதற்கு மீண்டும் தீர்வு காணவும் முழு மூச்சுடன் செயல்படவும் இன்றைய அரசியல் நடவடிக்கை போதுமானதாக இடமளிக்கவில்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் போருக்குப் பிறகுதான் ஈழத் தமிழர்களின் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. அவர்களுக்கு எதிர்காலத்தில் ஒரு நல்ல முடிவு ஏற்படலாம். தமிழக மக்கள் மூலம்தான் ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகாண முடியும். ஆனால், அது எப்படியென்பதைக் காலம்தான் பதில் சொல்லும்.

பேரறிவாளன், சாந்தன் உட்பட 7 பேரை 161ஆவது விதியைப் பயன்படுத்தி தமிழக அரசு விடுதலை செய்திருக்கலாமே?

அதே 161ஆவது விதியை பயன்படுத்தி 7 பேரையும் கலைஞர் விடுதலை செய்யவில்லையே, ஏன்? உச்சநீதிமன்றத்தில் முதல்வர் அவர்களுக்கு வழக்கு இருக்கும் காரணத்தால்தான் முதல்வர் பொறுமையாக இருக்கிறார் என்றே நினைக்கிறேன்.

தற்போது சிறையில் பேரறிவாளன் தாக்கப்பட்டுள்ளது பற்றி?

சிறையில் பேரறிவாளன் தாக்கப்பட்டது வழக்கமாகச் சிறையில் நடக்கும் சண்டைதான். சிறைக் கைதிகளுக்குள் சண்டை வருவது எல்லா நாட்டுச் சிறைகளிலும் உண்டு.




# NORTH AMERICAN COLLEGE OF PHARMACEUTICAL TECHNOLOGY

**Canada's Leading Technical/Healthcare College**

PCC REGISTERED

AWARD WINNING HEALTHCARE COLLEGE FOR OUTSTANDING GRADUATES

info@nacptpharmacollege.com www.nacptpharmacollege.com

## We are now accepting International Students

சர்வதேச மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது

### Eligibility Criteria

- Science and Engineering Graduates
- Healthcare Professionals from any country
- Second Career / Laid off Candidates
- WSIB / Social Assistance Candidates

தேர்வு பெற்ற மாணவர்களுக்கு $28,000 வரை அரசு உதவித்தொகையாக வழங்கப்படும்.

"Upto $28000 Government grant available for qualified candidates"





JOB ASSISTANCE FOR EVERYONE!

SCHOLARSHIP FOR QUALIFIED CANDIDATES!!!

MAKE AN APPOINTMENT FOR CAREER COUNSELLING

**416-412-7374 | 416-857-7603**

**Our Address:**
5310 FINCH AVENUE EAST, UNIT 9
SCARBOROUGH, ON., M1S 5E8

Are you a Science or Engineering Graduate?

We can assist you to get into major pharmaceutical, bio-tech, food, government sectors within 6 to 12 months

As of June 1st, 2014, NACPT was designated as an International Student Learning Institute by the Canadian Government (CIC)

## Courses & Programs offered by NACPT

### Postgraduate Diploma Hands-on Training Programs:

- Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology (Full-time/Part-time)
- Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research

### Certificate Training:

- More than 30 certificate training in QA/QC, Instrumentation (HPLC, GC, Dissolution, UV and etc)Validation, Regulatory Affairs, Manufacturing Technology, Clinical Research and Formulation
- HACCP, SQF and Food Handler Certification
- Project Management & Six Sigma
- Audit and Inspection

### Tutoring Programme for Engineering:

- Clinical Engineering and Electronics Technologist
- CBET Exam Preparation for Biomedical Engineering Technologists
- Operation and Maintenance: Clean Air Station and Systems
- Hands on Practical for Biomedical Students

### Diploma Hands-on Training Programs:

- Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical, Manufacturing Formulation and Validation Technology
- Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Quality Control and Quality Assurance



Recent Graduated Students are from
USA · UK · Iran · India · Dubai · Canada · Sri Lanka · And more

Upto $5,000 will be awarded as scholarship from our college for all eligible candidates according to marks.

### Other Certificate Training: Accounting and Travel:

- Simple Accounting
- QuickBooks and Payroll
- ACCPAC
- Travel and Tourism course
- Amadeus Booking System
- Sabre Booking System
- Tour Package Booking
- Cruise Booking
- Travcom-Travel Accounting System

### Exam Preparation:

- Pharmacy Licensing
- MCAT/PCAT/DAT
- IELTS and Language Training
- Travel Agent and Real Estate Licensing

மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு கல்லூரிசார்பாகவும் $5,000 வரை உதவித்தொகையாக வழங்கப்படும்

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

OPEN 7 DAYS A WEEK
9am-11pm

VISA

- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash



SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

TIRE SPECIALS
NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95

FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV

BRAKE JOB
STARTING FROM
$199

WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

TRANSMISSION FLUSH
*Starting From…*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

## 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

CALL SUBAS DIRECT → 416-206-9489

Tel: 416-628-4399

Email: jrsautotech@hotmail.ca

Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.294.2963


IP
IP GOLDHOUSE LTD.
Design your dreams with us
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை விற்பனையாளர்கள்
New Arrivals
Special Wedding sets &
Bangle Sets
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
905-554-5890




















Free Real Estate Class - Call: 416.321.6969











விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com